# மாத இதழ் கட்டுரைகள்

39

40

41

42

43

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

"தமிழ்மறை ஒன்றே! தமிழரின் நெறி!!"

# உலகத் தமிழ்மறை ஆராய்ச்சி மாநாடு

## கோலாலம்பூர்- மலேசியா-2005

# INTERNATIONAL SYMPOSIUM ON HOLY TAMIL SCRIPT TIRUKKURAL

## KUALA LUMPUR-MALAYSIA-2005

PATRONS / தலைமைப் புரவலர்கள்

DATO SERI DR.S.SAMY VELLU.
டத்தோ ஸ்ரீ டாக்டர்.ச.சாமிவேலு
TAN SRI K.R SOMASUNDRAM.
டான் ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம்

DEPUTY PATRONS
துணைப் புரவலர்கள்

டத்தோ ஜி.பழனிவேல்
Y.B DATO' G.PALANIVEL.

டத்தோ எஸ்.வீரசிங்கம்
Y.B DATO' S.VEERASINGAM.

டத்தோ எஸ்.சோதிநாதன்
Y.B DATO' S.SOTHINATHAN.

டத்தோ எம்.கேவியஸ்
Y.B. DATUK M.KAYVEAS.

ASST. PATRONS
உதவிப் புரவலர்கள்

மாண்புமிகு .பி.கோமளாதேவி
Y.B.PUAN P.KOMALADEVI

மாண்புமிகு எஸ்.விக்னேஷ்வரன்
Y.B.TUAN S.VIGNESWARAN

மாண்புமிகு டாக்டர் எஸ்.சுப்ரமணியம்
Y.B.DR.S.SUBRAMANIAM.

"எழுத்தாண்மை ஏந்தல்"
"EZUTHAANMAI ENTHAL"
முனைவர் பெரு.அ.தமிழ்மணி
DR.PERU.A.TAMILMANI
மாநாட்டுத் தலைவர்
ORGANISING CHAIRMAN
012-2551039
019-2132055

திரு.கி.பழனிச்சாமி ஏ.எம்.என்.,பி.பி.டி
MR.K.PALANISAMY AMN.,PPT
துணைத் தலைவர்
DEPUTY CHAIRMAN
019-2724306

இஞ்ஜினியர் ச.சின்னசாமி
IR.S.SINASAMY
நிதிக்குழுத்தலைவர்
CE CONCE COMMITEE CHAIRMAN
019-2865034

திரு.எஸ்.கே.சுப்பையா
MR.S.K.SUPPIAH
செயலாளர்
SECRETARY
019-2038400

திரு.மு.சந்திரசேகரன்
MR.M.CHANDRA SEGARAN
இணைச்செயலாளர்
JOINT SECRETARY
012-3770640

திரு.கோபால்பெருமாள்
MR.GOPAL PERUMAL
பொருளாளர்
TREASURER
017-8737393

என்.வி.கலைமணி எம்.ஏ
34, பார்த்தசாரதி நகர்,
2வது தெரு,ஆதம்பாக்கம்,
சென்னை-600088

அன்புடையீர்,

வணக்கம். தங்களின் மேலான கவனத்திற்கு. முதலாவது உலகத் தமிழ்மறை ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் ஜூன் திங்கள் 17, 18, 19-ல் மூன்று நாட்கள் கோலாலம்பூரில் நடைப்பெறவிருக்கின்றது என்பதை தாங்கள் அறிந்ததே! அம்மாநாட்டையொட்டி உலகலாவிய நிலையில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் தாங்கள் பங்குப் பெற்றதற்கு மிக்க நன்றி.

அப்போட்டியில் தாங்கள் எழுதிய சிறுகதை ☐, புதுக்கவிதை ☐, மரபுக்கவிதை ☐ , கட்டுரை ☑ போட்டியில் முதலாவது (US300 ☑), இரண்டாவது (US250 ☐), மூன்றாவது (US200 ☐) மற்றும் ஆறுதல் (US50 ☐) பரிசு கிடைத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இப்போட்டிக்குரிய பரிசு தொகையை தாங்கள் மாநாட்டின் நிறைவு விழாவின் போது ஆதாவது ஜூன் திங்கள் 19ஆம் திகதி வந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அப்பரிசை நேரில் பெற்றுக் கொள்ள தங்களுக்குச் சாத்தியப்படவில்லையானால் நாங்கள் அப்பரிசை முறையாக தங்களுக்கு வந்து கிடைக்குமாறு ஏற்பாடு செய்கிறோம் என்று கூறி முடிக்கின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க நம் இனம்!

தமிழ்மறை ஒன்றே ! தமிழரின் நெறி

தங்கள் அன்பிற்குரிய

..............................................
முனைவர் பெரு. அ. தமிழ்மணி
தலைவர்,
முதலாவது உலகத் தமிழ்மறை ஆராய்ச்சி மாநாடு.

International Symposium on HolyTamil Script Tirukkural
**PENGURUSAN KOORDINASI TAMIL**
No.28C,Jalan SG 3/2, Taman Sari Gombak, 68100 Batu Caves,Selangor Darul Ehsan.Malaysia.
Tel : 603-6186 5348 Fax : 603-6189 5367. E-mail : admin@tamilmarai.com. Website : www.tamilmarai.com.
"தமிழால் ஒன்றுபடுவோம்! தமிழனால் முடியும் என்போம்!!"

# உலகப் பார்வையில் தமிழ்மறை!

எழுத்தின் வடிவத்தையும், எழுத்தின் ஒலி வடிவத்தையும் தமிழ்ச் சான்றோர் உருவாக்கியபோது, எண்ணற்ற மேதைகள் அதற்காக உழைத்தார்கள்.

ஞாலம், ஞானத் திரட்சிக்காகக் கையேந்தி நிற்கும் காலத்தில் கோலத் தமிழ் எழுத்து ஒவியக் கூட்டங்களை, அவர்கள் உருவாக்கினார்கள்.

ஓங்காரத் தமிழ் மொழியின் பயனை ஓர்ந்து, ஆங்கார ஆதவனின் எரி நெருப்பை அலட்சியப்படுத்தி, பாங்கான தங்களின் பண்புகளுக்கு வாழ்த்துக் கூறியவர்கள் - அந்தத் தமிழ் அறிஞர்கள்.

தீங்கு உளம் நடுங்கும் தீந்தமிழ் மனமுடைய அவர்கள், பரன்பரை பரம்பரையாகத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை - ஒவியமாய்? காவியமாய், வாழ்க்கைத் தத்துவமாய் இயற்றி மறைந்தார்கள்.

அழுதுகொண்டே பிறக்கின்ற மனிதப் பிஞ்சு? சிரித்துக் கொண்டே சாகும்வரை - வாழ்க்கைக்குரிய மனித நெறித் தத்துவங்களை, ‘அகம்-புறம்’ என்று தமிழிலே வடித்துத் தந்தார்கள்.

காலம்; அவர்களைக் களவாடிச் சென்றாலும், அந்தக் கன்னித் தமிழ் சிந்தனையாளர்கள் தேடித் தந்த சிந்தனைச் செல்வங்கள் - இன்றும் நம்மிடையே நடமாடுகின்றன.

குடல் விழுங்கும் உணவைப் போல, கபாடபுரத்துப் பைந்தமிழ்க் கருவூலங்களை, தென்மதுரைத் தமிழ்ப் புதையல்களை, கடல் விழுங்கியபோதும், கண்டு கலங்காத அறிவேறுகளாக - அவர்கள் திகழ்ந்தார்கள்.

உலகமே சிந்திக்கத் திராணியற்று காலச் சிதைவுக்கு ஆட்பட்டுக் கலங்கிக் கிடந்த நேரத்தில் - “யாதும் ஊரே - யாவரும் கேளிர்” என்ற ஒருலகச் சமுதாயத் தத்துவத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் வாயிலாக, கொஞ்சு தமிழால் உலகுக்கு விளக்கிக் கொண்டிருந்த இனம் - தமிழினம்.

காலக் கரையான்களால் அழிக்கப்படாத அந்தத் தமிழ் இனத்திலேதான், பரன்பரை பரம்பரையாகத் தமிழ் மேதைகள் தோன்றித், தெள்ளுதமிழை வளர்ப்பதற்காகச் சீரியத் தொண்டாற்றி வந்தனர்.

நெடுங்குன்றம் நிமிர்ந்து நின்ற உச்சிக்கு மேல் நின்ற தமிழ் நிலவாய், ஞானச் செந்தாமரை எழிலையும் தோற்கடிக்கும் திருக்குறள் தோற்றமாய், தமிழ்ப் புண்பூட்டிற்குத் தடம் புரளா அறிவூட்டும் சிந்தனையாளராய் [illegible], அவர்களிலே ஒருவராக இன்றும் நிலைத்து நிற்பவர்தான் திருவள்ளுவர் பெம்மான்.

நெசவுத் தொழிலைச் செய்துக் கொண்டே, அவர் வாழ்க்கையையும் நெய்து வந்தார்! மனித வாழ்க்கை; தறியின் பாவை விட - மிக வேகமாக ஒடுவதைக் கண்டார்.

அதனால்தான், வாழ்க்கையை நெய்ய ஆரம்

இல்லையென்றால், உண்மையைப் பெய்ய ஆரம்பித்தார் என்று காலம் அவரைக் கணிக்கின்றது.

திருவள்ளுவர் காலத்தை கி.மு. 31- என்று தமிழகப் புலவர் குழு வரம்பு கட்டியுள்ளது. அதாவது இன்றைக்கு 2036 - ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தில் அவர் வாழ்ந்ததாகக் கால வட்டம் அறிவிக்கின்றது.

தமிழ்ப் பெரும் புலவர், ஆராய்ச்சி வித்தகரான ஞா. தேவநேயப் பாவணர் அவர்கள், திருவள்ளுவர் காலத்தை கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று வரையறுத்து, திருக்குறளுக்கு மரபுரையும் எழுதியுள்ளார்.

எனவே, திருவள்ளுவர் வாழ்ந்தபோது 'இயேசு நாதர்' என்ற மழையே பெய்யவில்லை. அதனால், கிறித்துவம் முளைவிடாத நேரம். 'இசுலாம்' என்ற புல் பூண்டுகள் அரேபியப் பாலைவனச் சோலையிலே அரும்பாத காலம், அத்தகையக் கால வட்டம் வள்ளுவப் பெருந்தகை வாழ்ந்த காலக் கட்டம்.

யூதம், கன்பூசியஸ், பார்சியம் போன்ற மத நெறிகள் வள்ளுவர் காலத்துக்குச் சிறிது முற்பட்டவை. என்றாலும், அவை தமிழ் நாட்டில் காற் சுவடுகளைப் பதித்தில.

சைவம், வைணவம், வைதிகம், பவுத்தம், சமணம் மதக் கொள்கைகள் அப்போது பரவியிருந்தாலும்; தமிழ்நாட்டில் தற்காலம் போல் அவை பரவியிராத சூழ்நிலை.

எனவே, திருவள்ளுவர் முதன் முதலாக எழுத முற்பட்டபோது, அவருடைய எழுத்தின் கழுத்தின் மேல் மதங்களின் கூரிய வாட்கள் விழ ஆரம்பித்தன. அந்த அற்புத மாயங்களை எல்லாம் மீறி நின்று திருவள்ளுவர் சிந்தித்தார்.

கி.மு. 427க்கும் - 347க்கும் இடையே உள்ள காலக் கட்டத்தில் வாழ்ந்ததாக உலக வரலாறு கூறும் கிரேக்கப் பேரறிஞர் பிளாட்டோ.

~~Plato~~, 'Knowledge has its seat in the head; it is the eye of desire and can become the pilot of the soul' (Plato)

'அறிவு தலைமையாய் நின்று மனித விருப்பத்தை விழுமியதாய் நிறைவேற்றும் விழிபோல உள்ளது. உயிர் வாழ்வு துன்புறாதபடி நல்ல வழி காட்டியாய் அது அமைந்து நிற்கிறது'. என்ற, கருத்துக்கேற்ப, திருவள்ளுவரது சிந்தனை நிழலாடி இருக்கலாம்.!

"The people need the guidance of philosophers; as desires need the enlightenments of knowledge"

- என்ற அவரது எண்ணத்திற்கேற்ப, "உலகில் தோன்றிய ஒவ்வொருவனும் தான் பிறந்த மண்ணுக்குரிய கடமைகளைச் செய்ய உரிமையுடையவனாவான். வீணாகக் காலத்தைக் கழிப்பவன் கடையனாவான்". என்பதால், திருவள்ளுவர் "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்" என்ற குறட்பாவை எழுதித் தமிழ்ப் பண்பாட்டிற்கு மட்டுமன்று - உலக மக்களது வாழ்வியலுக்குரிய இலக்கணமாய், இலக்கியமாய் இன்றும் - இயங்கி வருகின்றார்.

ஏனென்றால், "There is nothing great in the world, but man

and inman there is nothing great - but mind".

"மனிதனைவிடச் சிறந்த ஒரு பொருள் இல்லை; மனிதனுக்குள் இருப்பவற்றில் சீரிய அறிவை விட அரிய பொருள் ஒன்றும் இல்லை" என்ற சாக்ரட்டீசின் ஞானத்தை அவர் பெற்றிருந்ததே காரணமாகும்.

இத்தகைய உலக மக்கள் வாழ்கின்ற இந்த உலகத்தை, இன்று நான்கு மதங்கள் ஆட்சி செய்கின்றன. அவை - பவுத்தம், கிறித்துவம், இஸ்லாம்; அன்றைய வைதிக மதம் என்று அழைக்கப்பட்ட இன்றைய இந்து மதம் என்பவை ஆகும்.

இந்த மதங்கள் எந்தெந்த உலக நாடுகளை மதத்தின் பெயரால் ஆதிக்கம் செய்கின்றன என்பதை உலக அறிஞர்கள் நன்கு உணர்வார்கள்.

ஆகிய

மதம் என்றாலே - கடவுள், உயிர், ஆன்மா, வழிபாடுகள், அந்தந்த மதக் கோட்பாடுகளை அமல்படுத்தும் நெறிகளைக் கொண்டவை. அவற்றை உலகப் பார்வையில் இங்கே சுருக்கமாகப் பார்ப்போம்.

திருவள்ளுவர் தனது திருக்குறள் நூலை - வெண்பா பாவின இலக்கணத்திலுள்ள இறுதி ஈற்றடிகளின் முதலடியில் நாற் சீர்களாலும், இரண்டாம் இறுதி அடியில் முச்சீர்களையும் அமைத்து, ஏழுசீர்களில் ஏன் எழுதினார்?

இறைவனை அடைதற்குரிய படி முறைகள் நான்கு. அவை: சீலம், நோன்பு. செறிவு (யோகம்) அறிவு என்பவை,

இறைவன் உயிர்களிடத்திலே ஒன்றாய், வேறாய், உடனாய், புணரும் முப்புணர்ப்பால் புணர்ந்து - தனது அருளை, இன்பத்தை உயிர்கட்கு வழங்குபவன் என்பதால், திருக்குறள் 'பா' அமைப்பை ஏழு சீர்களால் உருவாக்கினார். ஏன் அவ்வாறு திருவள்ளுவர் எழுதினார்?

அவர் காலத்தில் ஒரளவு பரவியிருந்த சாங்கியம், மீமாஞ்சம், வைதீகம், சமணம், பவுத்தம், சார்வாகம் போன்ற சமயங்கள்; 'கடவுள் என்ற ஒன்று தேவையில்லை' என்று கூறி, இறை கொள்கை இல்லாதவையாக இருந்தன. அறவாழ்வு, அல்லது ஒழுக்கம் மட்டுமே இருந்தால் போதும்-மக்கள் வாழ்க்கை சிறக்கும்' என்று பிரச்சாரம் செய்திருந்தன.

இந்த சமைய நெறியைத் திருவள்ளுவர் மிக எச்சரிக்கையோடு எதிர்த்து, 'அறவாழ்வு, ஒழுக்கம் அமைந்து நிலை பெறுவதற்குக் கூட, இறையுணர்வும், வழிபாடும் தேவை' என்று வலியுறுத்தி - வற்புறுத்தியதால் தான்:

"அறவாழி அந்தணர் தாள் சேர்ந்தார்க்குஅல்லால்:
பிற ஆழி நீந்தல் அரிது" (8)
"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர். ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்" (6)

-என்ற, இறை ஒழுக்க நெறிகளைக் கூறினார். திருவள்ளுவர் தான் எழுதிய கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் பத்துப் பாடல்களோடு நில்லாமல், "உலகியற்றியான்", " வகுத்தான் வகுத்த வகையல்லால்," "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்"; "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை" என்ற குறட்பாக்களில்

இறையுண்மையை, இறை வலிமையை வற்புறுத்தினார்.

திருக்குறளில் கடவுள் உண்மையை, வழிபாடுகளைத் திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறிய பிறகே, தமிழ் நூல்களில் கடவுள் வணக்கம் என்ற பாக்களைப் பிற்காலத்தில் சேர்த்து நூலுடன் எழுதப்பட்டன.

உலக மக்களும், இந்தியாவில் வாழ்ந்த வேத கால மக்களும் "கடவுள் பலர்" என்று கூறி வந்தார்கள். இந்திரன், சோமன், மித்திரன், வருணன் என்ற Polytheism கொள்கையைப் புகுத்தி வழிபாடு செய்து வந்தார்கள்.

திருவள்ளுவர், அந்த பல கடவுள் தத்துவத்தை மறுத்தார். "ஒன்றே தேவன், "இறை ஒருவனே" என்ற Monotheism கொள்கையை வெளியிட்டார். அந்த ஒரே இறை, "ஆதி - பகவன்" என்றார். அவரை முதலாக உடையதே உலகு" என்றார்.

" கடவுள் உலகமாகப் பரவியுள்ளவர்" என்ற PANTHEISM தத்துவத்தைத் திருவள்ளுவர் கண்டித்தார். "ஆதி - பகவன் முதற்றே உலகு" என்றார்.

"கடவுள் வேறு, உலகம் வேறு. கடவுள் உலகத்திற்கு 'நிமித்த காரணன்'" என்றும் திருவள்ளுவர் அறிவித்தார்.

" என்றும் இருப்பது உலகம் - எவராலும் அது உருவாக்கப்பட்டது அன்று: அது தோன்றுவதும் இல்லை: அழிவதும் இல்லை" என்ற சமணர் கொள்கையை மறுத்தார்.

"உலகம் கடவுளை முதலாக உடையது: அதற்குத் தோற்றம், நிலை, இறுதி என்ற மூன்று தொழில்கள் உண்டு என்பதற்குச் சான்றாக, "உலகியற்றியான், ஆதி-பகவன் முதற்றே உலகு" என்றார்.

'உயிர் என்ற ஒன்று இல்லை', எந்தப் பொருளுக்கும் 'ஆன்மா' என்பது ஒன்றும் இல்லை' என்று வாதிட்ட பௌத்தர், உலகாயதர் வாதங்களைத் திருவள்ளுவர் மறுத்தார்.

'மன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ', 'மன்னுயிர்' 'ஓம்பி அருளாள்வர்', 'உடம்பொடு உயிரிடை நட்பு," என்று தனது குறட்பாக்களில் திருவள்ளுவர் முழக்கமிட்டார்.

" ஒரே ஓர் உயிர் தான் பல உடல்களிலும் இருந்து வருகின்றது' என்ற Monism கொள்கையைப் போதித்தவர்களைத் திருவள்ளுவர் மறுத்து, 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்ற குறளைத் தீட்டினார். எனவே, பல்லுயிர் உண்டு என்பதற்குப் பற்றுக்கோடாக கடவுட் கொள்கையைச் சான்றாக்கினார்.

" கடவுள் நிறை குணங்களின் உருவம். உயிர் இயல்பாகவே அறியாமை உடையது. அது முயன்று அறிவினைப் பெற்று உயரலாம்" என்பது திருவள்ளுவரது கோட்பாடு. அந்த முயற்சியில் ஈடுபடும்போது உருவாகும் வினைச் சார்புகளே வாழ்க்கை நிலைகள் என்றார்.

இதற்குச் சான்றாக, கடவுள் வாழ்த்துப் பாவில், 'இருள்சேர் இருவினையும் சேரா' என்றார். 'இருள் நீங்கி இன்பம் பயக்கும்' 'மருள் நீங்கி - மாசறு காட்சி யவர்க்கு' என்று 65-ஆம் குறளில் குறிப்பிடுகிறார்.

இருள் ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறைப்பதைக் காட்டுகிறது. அதாவது, இறைவனை இருள் மறைத்துள்ளது. ஞானிகளின் அறிவுரைகளை ஏற்றுப் பின்பற்றி நடந்தால், இருளை - அந்த மருளை அழிக்க முடியும், என்கிறார் திருவள்ளுவர்.

ஞானியர் அறிவுரைகள் என்றால், சங்கராசாரியர் போன்றவர்களது இன அறிவுரைகள் கூறுவோரல்லர், திருவள்ளுவரே எங்களைத் தான் சுட்டுகிறார் என்று, மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' என்ற 134-வது குறளையும், 'அறுதொழிலோர் நூன்மறப்பர், என்ற 560- வது கொடுங்கோன்மை அதிகாரச் சொற்களையும் அவர்கள், சான்றுக்கு இழுப்பார்கள்.

'அந்தணர்' என்பர் அறவோர் என்ற குறட் கருத்தால் மேற்கண்ட இனவெறியை எதிர்க்கின்றார் திருவள்ளுவர். காரணம், 'மற்றெவ்வுயிர்க்கும் குளிர்ந்த அருளைச் செலுத்தும் 'செந்தண்மை அந்த இனத்திற்கு இல்லையே' என்பது தான்.

கடவுள் என்ற பெயரை- 'இறை' என்று சுட்டுகிறோம். கடவுள் காப்பவர்! அதனால் இறை எனப்படுகிறார். அதே காக்கும் தொழில் மன்னனிடமும் அமைந்திருப்பதால், நாட்டின் காவலனும் 'இறை' என்று கூறப்படுகிறான். அதைத்தான் 'இறைமாட்சி ' என்ற அதிகாரத்தால் திருவள்ளுவர் விளக்குகிறார்.

நாட்டைக் காப்பவனை 'இறை' என்று அழைப்பதைப் போல, வீட்டைக் காக்கும் இல்லறக் காவலன் 'கொழுநன்' என்ற சிறு தெய்வமாகின்றான். அதனால் தான், 'தெய்வம் தொழா அள்' என்ற குறளில் அந்தக் கருத்தைச் சுட்டுகிறார் திருவள்ளுவர்,

தெய்வம் தொழுதற்குரிய எண்வகைப் பொருட்களான நிலம், நீர், தீ, உயிர், காற்று, நிலா, சூரியன், புலனாய மைந்தன் என்ற படி முறைகளில், மண் முதல் விண் வரையுள்ள ஐந்தும் பஞ்சபூத சக்திகளாகும். நிலா, சூரியன் இரண்டும் ஒளி வழங்கும் பொருட்களாக, தனிப்பட எங்கும் தோன்றுவன. இவற்றுக்கெல்லாம் மேம்படும் 'இறை' - வானுறை தெய்வமாகும்.

கணவன் - மனைவி இருவரும் ஞான மெய்யடியார்களைத் தொழுபவர்கள். மனைவிக்கு கணவன் உடனுறையும் தெய்வமாவான். பிற தெய்வங்களாகிய சூரியன், நிலா, வானுறை தெய்வம் ஆகியவற்றைத் தொழாமல், கணவனைத் தெய்வமாகத் தொழல் வேண்டும். தெய்வமாக எண்ணி வழிப்படல் வேண்டும். இது பாவனை. பாவனைப் பயன், பாவிப்போர்க்கும், பாவிக்கப்படும் பொருளுக்கும் வந்து சேருமாதலால், தெய்வம் தொழாள் கொழுநனைத் தொழுது என்ற பாவனை கூறப்பட்டது.

தொல்காப்பியர், 'இன்பமும் - பொருளும் - அறனும் - என்றாங்கு, அன்பொடுபுணர்ந்து ஐந்திணை மருங்கின்' என்றார்.

திருவள்ளுவர் பெருமான், தொல்காப்பியரால் மூன்றாவதாக எண்ணப்பட்ட 'அறத்தை', திருக்குறளின் முதலாவது பால் ஆக வைத்தார். அறமே வாழ்க்கைக்கு முதன்மையானது என்பதால், அவர்

எழுதிய குறட்பாவில் அறத்தை முன்னிறுத்தி, தொல்காப்பியரின் இன்பமே, முதன்மை என்ற குறிக்கோளை மறுத்தார்.

அதற்குச் சான்றாக, 'அறத்தான் வருவதே இன்பம்: மற்றெல்லாம் - 'புறத்த புகழும் இல்' என்றார். தனி மனித வாழ்வுக்கு இன்பம்: சமுதாய வாழ்க்கைக்கு 'அறமே' முதன்மை - என்பதை நிலை நாட்டியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் ஏற்றிய இந்தத் தமிழர் பண்பாட்டு, நாகரிகப் புரட்சிக் கொடியை: அவருக்குப் பின்வந்த 'புறநானூறு' சிறப்புடைய மரபிற் பொருளும்-இன்பமும், அறத்து வழிப்படுஉம் தோற்றம் போல' என்று வீரப்பண் பாடி - வீறுகொண்டு பறந்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறு, இன்றைய உலக நாடுகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற மதக் கோட்பாடுகளை, தத்துவக் குறிக்கோள்களை, ஏறக்குறைய 2300 ஆண்டுகட்கு முன்பே மறுத்து, தமிழர் பண்பாடுகளை நிலை நாட்டிய மதச் சீர்திருத்த ஞானப் புரட்சியாளரான திருவள்ளுவர் பெருமானுக்கு - 1962, மே -3, 4 ஆம் நாட்களில் ஒரு மாபெரும் சோதனை ஏற்பட்டது.

தமிழ் மறைச் சிற்பியான திருவள்ளுவருக்கு உலகில் இத்தகைய ஒரு மத ஆய்வுப் போர்க்களம்; அவர் வாழ்ந்திருந்த காலம் முதல் அன்று வரை வேற்று மதச் சவாலால் உண்டானதில்லை, உருவானதில்லை. அந்த விவரம் கீழே உள்ளது.;

சென்னையில் இன்றும் நடமாடும் நண்பர் புலவர் தெய்வ நாயகம் என்பவர், 'திருவள்ளுவர் கிறித்தவரா', ஐந்த வித்தான் யார்? வான் எது? நீத்தார் யார்?, எழு பிறப்பு!, சான்றோர் யார்? என்ற ஆறு ஆய்வு நூல்களை எழுதி, திருவள்ளுவர் பெருமானைக் கிறித்துவராக்கிட அரும்பாடுபட்டார்.

இதில் உள்ள கிறித்துவப் பிரிவுகளின் ஒற்றுமை என்ன தெரியுமா? நூல்களை எழுதியவர் CSI கிறித்துவர், அந்த நூல்களைப் புத்தகங்களாக்க உதவியவர் - அப்போது சென்னை நகர ரோமன் கத்தோலிக்கர் ஆர்ச் பிஷப்பாக இருந்த அருளப்பா என்பவர், திருவள்ளுவரைக் கிறித்துவராக்க பணம் செலவு செய்து, சென்னை எல்டாம்சு, சாலையில் இயங்கும் கிறித்துவக் கலைத் தொடர்பு நிலையம் இயக்குநர் அருட்திரு சா. சுவிசேஷ முத்து பி.டி., எம்.டி.எச்., அவர்கள், இவர் ப்ராட்டஸ்டண்டு கிறித்துவர்.

திருவள்ளுவர் கிறித்துவரா? என்ற வினாவுக்கு விடை கண்டிட, இரண்டு நாட்கள் மாநாடு சென்னை எல்டாம்ஸ்: சாலையிலுள்ள கிறித்துவக் கலையரங்கில்;மே மாதம் 3, 4 நாட்களில் 1962-ஆம் ஆண்டில் நடைபெற்றது.

திராவிட மொழி நூல் புலமையில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தவரும், தனித்தமிழ் இயக்கத் தலைவராக விளங்கியவரும், திருக்குறளுக்கு மரபுரை எழுதியவரும், கிறித்துவ மூதறிஞருமான பண்டித ஞா. தேவநேயப் பாவணர், இந்த இரண்டு நாள் மாநாட்டுக்குச் சிறப்புத் தலைவராக அமர்ந்தார்.

இந்த மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக இந்த

கட்டுரை ஆசிரியரான புலவர் என்.வி. கலைமணி பணியாற்றினார்.

புலவர் தெய்வநாயகம் எழுதிய ஒவ்வொரு நூலுக்கும், அறுவரைக் கொண்ட ஒவ்வோர் அணியாக, ஆறு நூற்களுக்கும், தமிழகம் முழுவதிலுமுள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட 36 பேரறிஞர்கள் இந்த வாதப்போரில் கலந்து கொண்டார்கள்.

இரு நாட்கள் மாநாட்டிலும் நடைபெற்ற திருக்குறள் அறுவை சிகிச்சையால் விளைந்த அனுபவத்தைக் கேட்டிட, அறிஞர்களது ஆய்வுகளின் ஆழமறிந்திட, ஆயிரக்கணக்கான அறிஞர் பெருமக்கள் வருகை தந்தார்கள். காரணம், இதற்கான விளம்பரங்கள் 'தினமணி ', 'முரசொலி ' நாளேடுகளில் வந்தவை தான்.

ஐந்தவித்தான் யார்?

திருக்குறள் பீடம் அழுகரடிகள் அணித் தலைவர். டாக்டர் ச. பாலசுப்பிரமணியம் எம்.ஏ.எம்.லிட்., பண்ணாராய்ச்சி வித்தகர் பேராசிரியர் பி.சுந்தரேசனார், சமண மதத் தலைவர் ஜீவபந்து டி,எஸ். ஸ்ரீபால், பேராசிரியர் வி.பா.கா. சுந்தரம் எம்.ஏ., பேராசிரியை ப. தமிழ்ச் செல்வி எம்.ஏ. ஆகியோர் ஐந்தவித்தான் யார்? அணி உறுப்பினர் அறிஞர்களாவர்.

வான் எது?

அணித்தலைவர் : பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி. விசாரத் (இந்தி)

அணி உறுப்பினர்கள்: டாக்டர் என். சுப்புரெட்டியார் எம்.ஏ. பி.எச்.டி., டாக்டர் ஞானப்பிரகாசம் எம்.ஏ., பி.எச்.டி., பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், பேராசிரியர் கே. எஸ். மகாதேவன் எம்.ஏ., தத்துவக் கவிஞர் குடியரசு.

நீத்தார் யார்?

அணித் தலைவர்: டாக்டர் வ.சுப. மாணிக்கம் எம்.ஏ. எம்.ஓ.எல்., பி.எச்.டி.,

அணி உறுப்பினர்கள்: டாக்டர் மு. கோவிந்தசாமி எம்.ஏ.எம்.லிட்., பி.எச்.டி., புலவர் மு.சண்முகம்பிள்ளை, பேராசிரியர் பொன் ஆ. சத்திய சாட்சி எம்.ஏ., எம்.ஓ.எல்., பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் எம்.ஏ., பேராசிரியர் இ.சு. முத்துசாமி எம்.ஏ.பி.டி.

ஏழு பிறப்பு!

அணித் தலைவர்:தவத்திரு குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி.

அணி உறுப்பினர் டாக்டர் இரா. சாரங்கபாணி எம்.ஏ. எம்.லிட்., பி.எச்.டி., வித்வான் வை. இரத்தின சபாபதி பி.ஓ.எல்., எம். ஏ., மகாவித்வான் ச. தண்டாபணி தேசிகர், ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி, வித்வான் வி.பி.நடராசன்.

சான்றோர் யார்?

இராவண காவியம் ஆசிரியர். புலவர் குழந்தை.

அணி உறுப்பினர்: பேராசிரியர் டாக்டர் புலவர் ம. நன்னன் எம்.ஏ., பேராசிரியர் மோசசு பொன்னையா எம்.ஏ., தமிழ்நாடு காவல்துறை சு.மி. டயஸ் ஐ.பி.எஸ். டி.ஐ.ஜி.,(சமணர்) பேராசிரியை சாரதா நம்பியாரூரான் எம்.ஏ., சோம. இளவரசு.

*திருவள்ளுவர்*
*கிறித்துவரா?*

*அணித்தலைவர்: டாக்டர் மெ. சுந்தரம் எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,*

*அணி உறுப்பினர்: க.த. திருநாவுக்கரசு எம்.ஏ., (தமிழ்) எம்.ஏ., (வரலாறு) எம்.லிட்., டாக்டர் இராம. பெரிய கருப்பன் எம்.ஏ., (வரலாறு) எம்.லிட்., டாக்டர் இஸ்ரவேல் எம்.ஏ., பி.எச்.டி., புலவர் க. வெள்ளை வாரணனார், பேராசிரியர் எழில் முதல்வன் எம்.ஏ.,*

*இறுதியாக, மாநாட்டின் இரண்டு நாட்களிலும் திருக்குறளார் வி. முனிசாமி பி.ஏ., பி.எல்., சிறப்பு உரை ஆற்றினார்.*

*இரண்டு நாள் திருக்குறள் ஆய்வு மாநாட்டிற்கும் தலைமை வகித்த தலைவர் தேவநேயப் பாவாணர்.; அவர் ஒரு கிறித்துவராக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு நியாயமான, நேர்மையான, கடமையான நீதியை, தீர்ப்பை வழங்கினார்! என்ன அந்த தீர்ப்பு?*

*திருவள்ளுவர், செயிண்ட் தாமஸ் என்ற பாதிரியார் மத உரையைச் சென்னை மாநகரிலே கேட்டுத் திருக்குறள் நெறிகளை எழுதியவரல்லர். அவரது வணிக நண்பரான ஏலேலசிங்கர் மூலமாகவும் கிறித்தவக் கருத்துக்களை அறிந்து திருக்குறளை எழுதியவரல்லர்.*

*நவநீத கிருஷ்ணன்தான் இயேசுநாதர் என்று சிலர் கூறுவதைப் போல இருக்கின்றது; மேற்கண்ட ஆராய்ச்சிகள். நான் எழுதிய திருக்குறள் மரபுரையில் திருவள்ளுவரது காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று கூறியுள்ளேன்.*

*உலகத்தை உய்விக்க வந்த தீர்க்க தரிசிகளது வாக்குகள், நெறி முறைகள், ஒவ்வொரு நாட்டு ஞானியர்கள் இடையே தோன்றுவதும், கூறுவதும் அந்தந்தக் காலக் கட்டத்துச் சிந்தனையில் மலர்வதுமுண்டு. அதனால், அவரிடமிருந்து இவர் சிந்தனைகளைப் பெற்றார் என்றோ, இவரிடமிருந்து அவர் பெற்றார் என்றோ நினைப்பது இயல்பு! அதற்காக அந்த ஞானியர்களுக்குக் களங்கம் கற்பிக்க மாட்டார்கள் தேர்ந்த சிந்தனையாளர்கள்!*

*எனவே, திருவள்ளுவர் காலத்திற்கும் - இயேசு நாதர் காலத்திற்கும் உள்ள இடைவெளியில், நடைபெற்ற மதக் கோட்பாட்டு நெறிகளது வளர்ச்சிகளை நினைத்துக் கொண்டு திருவள்ளுவர் கிறித்துவரா? என்ற வினாவை எழுப்புவதில் எனக்கு உடன்பாடன்று.*

*- என்று தேவநேயப் பாவாணர், தனது முடிவுரைத் தீர்ப்பைக் கூறிமுடித்தார்.*

*இந்த மாநாட்டின் வரவேற்பாளராக இருந்த புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ., தனது வரவேற்புரையில் பேசும்போது.;*

*'திருக்குறளை யாத்த திருவள்ளுவர் பெருமானுக்கு ஈராயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக் காலத்தில், இத்தகைய ஒரு வேற்று மதச் சவால், இன்றுவரை ஏற்பட்டதில்லை.*

*திருக்குறள், வாழ்க்கையில் ஏற்படும் சலனங்கள் அத்தனைக்கும் எப்படி வளைத்துப் பொருள் காண்பது என்பதற்குரிய ஓர் அகராதி!*

குறள் பிறந்த நாள் முதல் - இன்று வரை, அதன் உள்ளே சென்றவன், தன் கருத்து, தன் தெய்வம், தன் மதம் இருக்கின்றதா என்று பார்க்கிறானே தவிர, அதன் உண்மையை உணர்ந்து பார்த்தது இல்லை.

எந்த உரையாசிரியருடைய நூலை எடுத்துப் பார்த்தாலும், அதில் அவரவர் விருப்பு, வெறுப்பு, தன்னலம், தன்மதம் தாண்டவமாடுகின்றதே அன்றி - எந்நாட்டவருக்கும், எம் மதத்தினருக்கும், எக்காலத்தவருக்கும் பொருந்துமாறு எழுதப்பட்டதாகப் புலப்படவில்லை.

கடவுளாலேயே நேரிடையாகச் சொல்லப்பட்டு, இரண்டாவது ஆட்களாலே “Second hand person” னால் எழுதப் பெற்ற பகவத்கீதை, பைபிள், திருக்குரான் போன்றவை கூட, நேரிடையான பொருளை ஓர் இனத்திற்கோ, ஒரு மதத்திற்கோ கொடுத்து விடுகின்றது.

ஆனால், திருக்குறள் தமிழ்தான்! அதிலுள்ள எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்கள் தான். உலகத்திலுள்ள தத்துவங்கள் அத்தனையும் - மதத் தத்துவங்கள் அனைத்தும் - தங்களுடைய அடிப்படைகளுக்கு ஏதாவது கிடைக்காதா என்று, குறளை மட்டும் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கின்றன என்றால் - திருக்குறளின் பெருமை என்னே!

தமிழ்நாட்டில், ஒவ்வொரு காலக் கட்டத்தில் தோன்றிய உரையாசிரியர்கள் அத்தனைபேரும், அவரவர் மதக் கண்ணோட்டத்தோடு குறளைப் பார்த்த பிறகும், இதற்குள்ளே இன்னும் வேறு ஏதோ பொருள் பொதிந்திருக்க வேண்டுமென்று, மேல் நாட்டுத் தத்துவவாதிகளும் - பேராசிரியர்களும், அறிவு வெறி கொண்டு இங்கே பறந்து வருகிறார்கள் என்றால், குறளை ஒருவன் எழுதினான் என்பதற்குப் பதில், குறள் இயற்கையாகவே தோன்றிய ஒன்று என்று கூடச் சொல்லிவிடலாம்.

காலத்தைக் கடந்த ஒரு மத நூல் இதுவரையில் இல்லை, ஏனென்றால், அந்த மதத் தலைவரின் பிறப்பும் - இறப்பும் காலண்டரில் தெரிகிறது.

குறளாசிரியர் எப்போது பிறந்தார் - எப்போது இறந்தார் என்று கூட இதுவரைத் தெரியவில்லை.

அதன் உரையாசிரியர்களும் - ஆய்வாளர்களும் அவரவர் முடிவுக்குக் கிட்டிய மதிப்பீட்டை வைத்துக் கொண்டுதான் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இப்படி, உட்பொருளைக் கொண்டு, புதைபொருள் ஆராய்ச்சிக்கு இலக்கான நூல் - உலகத்திலேயே ஒன்றுகூட இல்லை - திருக்குறள் தவிர!

இந்தக் குறளுக்கு இது தான் பொருள் என்று வாய் மூடுமுன், ஏன் - இதுவாக இருக்கக்கூடாது என்ற கேள்வியே எழுகின்றது.

வியப்பிற்குரிய பிறப்பை எடுக்காமல். சாதாரண அரச குடும்பத்திலே பிறந்த புத்தன் கூறிய தத்துவத்தை ஏற்றுக் கொண்ட பௌத்தர்கள் கூட, அதற்கு முன்னாலே இருந்த சமணர்கள் கூட, திருக்குறளைப் பார்த்து, இதில் எங்கள் கருத்தும் இருக்கிறது என்று வாதிடுவதைப் பார்க்கும்போது,

திருக்குறள், சமண, பௌத்த மதக் காலங்களையும் தாண்டி ஓடுகின்றது என்பதை வியப்போடு கவனிக்க வேண்டியதாக இருக்கின்றது.

அந்தந்தக் காலத்தில் உரை எழுதிய ஆசிரியர்கள், அவரவர் மதக் காலத்தை வைத்தே திருக்குறளின் காலத்தை நிர்ணயித்தார்கள். அதனால்தான், குறளுக்கு உரையாசிரியர்கள் இவ்வளவு வேகமாகப் பெருகலானார்கள்.

திருக்குறளின் காலம் இதுவரை தெரியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அப்போது அது எந்த மதத்துக்குச் சொந்தம்?

உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ள காலம் தானா - திருவள்ளுவர் காலம்? அந்த அறிவுக்குத் திட்டவட்டமான கால வரம்பு கண்டதுண்டா?

திருக்குறளைப் பொறுத்தவரை காலம் கடந்த ஒன்றாக இருக்கும்போது, காலச் சக்கரத்தில் மதங்கள் அடிபடுகின்ற போது, தமிழன் என்ற முறையில் - எனக்கு மகிழ்ச்சி. என்றாலும், ஆராய்ச்சி என்ற முறையில் அது வெறுப்பைத் தான் அளிக்கின்றது.

எனது திருக்குறளை யாரும் பாராட்டலாம் என்பது வேறு! எவனும் என்னுடையது என்று உரிமை கொண்டாடுவது வேறு!

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் கூறினார். ஆனால், ஒரு மதத்திற்கே தந்து என்று அவர் கூறவில்லை என்பதைக் கவனத்திலிருத்த வேண்டுகின்றேன்.

இந்தக் காலத்தில் ஒரு பூஞ்செடியைக் கூட, ஒருவன் தனி உரிமை கொண்டாட முடியாது. ஏனென்றால், இயற்கை முன்னே அது பொதுச் சொத்து.

எவனுடைய விரல்களிலிருந்து எழுத்தாணி அசைந்தாலும் சரி, அவன் எழுதுகின்ற எழுத்து அவனது அடுக்களைக்குச் சொந்தமல்ல என்பதை - நீங்கள் உணர வேண்டும்.

அது, கட்டளையில்லாமல் வருகின்ற, காற்றில் கலக்க வேண்டிய பொதுச் சொத்தாகும்.

நேரிடையாகவே நான் கேட்கிறேன். உங்களுடைய மதங்கள் கடவுளால் நேரிடையாகப் படைத்ததுதானே?

அதே கடவுளுடைய பொதுத் தன்மையில் ஓர் அணுகூட இருக்காதா மனிதனுக்கு?

ஆகவே, இங்கே ஆய்வுக்காக வந்திருக்கின்ற முப்பத்தெட்டுப் புலமையாளர்களையும் நான் தாள் பணிந்து கேட்கின்றேன்.

உங்களுடைய மதத்தைக் கடந்து, இனத்தைக் கடந்து - வெளி வருகின்ற ஆற்றல் படைத்த சிறகுகள், உங்களுக்கு முளைக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

அப்படி முளைக்காவிட்டால், உங்களுடைய முட்டைகளை நீங்கள் சோதனையிடுங்கள். மனிதன் சரி பார்க்க முடியாத மிருகமல்ல. அத்தகைய நிலையிருந்தால், அவனைக் கடவுள் படைக்கவில்லை!

சிந்தனைகள் மிருகத்திற்கு இல்லாதபோது, மனிதனுக்கு மட்டும் இருக்கும்போது, உரிமைகள் - வேட்கைகள் இவற்றைத் தாண்டிச்

சிந்திக்கின்ற அவனுக்கு, அந்த ஆற்றல் இல்லையென்றால், நீங்கள் வருத்தப்படக் கூடாது - அவனைக் கடவுள் படைக்கவில்லை.

திருக்குறள் என்பது - கையில் கிடைத்த பலகாரமல்ல, உங்களது விருப்பம் போல - பங்கீடு செய்து உண்பதற்கு.

மாந்தரின் வாழ்க்கைக்கு அது ஒரு மா மருந்து! நோய்க்கு ஏற்றபடி நீங்கள் அதை உட்கொள்ள வேண்டும்.

திருக்குறள் தொடங்கிய காலத்திலிருந்து, விளம்பரத்திற்காக உரையெழுதுகின்ற ஆசிரியர்கள் வரை, அதன் நுணுக்கம், முடியாத மர்மக் கதையாகவே இருக்கின்றது - நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

சூழ்நிலையின் காரணமாக நீங்கள் மாறிவிட்டால், பிறக்கப் போகும் தொட்டில்கள், உங்களை மறந்து விடும்! எனவே, எச்சரிக்கையாக இருங்கள்.

ஏனென்றால், இனிமேல் பிறப்பவர்கள் உங்களைத் தூக்கி எறிபவர்களாகக் கூட இருக்கலாம் அல்லவா?

எனவே, காலம் கடந்து சிந்தியுங்கள் - (without time) தொட்டில் குழந்தைகள் உங்களைத் தொடர்வதற்கேற்ப சிந்தியுங்கள்.

உங்களுடைய விவாதங்கள் அனைத்தையும், அய்யன் திருவள்ளுவரது உயிர்ச் சொல்லோட்டக் குறள் நாதங்கள், காற்றிலேயிருந்து கவனித்துக் கொண்டு இருக்கின்றன.

அய்யன் திருவள்ளுவர் முன்னாலே - நீங்கள் சிறுபிள்ளைத்தனமாக இருக்கக் கூடாது. அவர் எதிர்பார்த்த - முதிர்ச்சியடைந்த - முழு மனிதனை உங்களுடைய ஆய்விலே உருவாக்கிக் காட்டுங்கள்.

திருக்குறளாராய்ச்சியைப் பொறுத்தவரை, இந்த ஆய்வு மாநாடு, அண்ட அளவில் வைத்து மறந்த சிறு புள்ளியாகவே கருதுகின்றேன்.

ஏனென்றால், அய்யன் திருவள்ளுவன் அண்டத்தைவிட விரிந்தவன் என்பது பொது மக்கள் கருத்து.

இதுவரையில் எழுதிய குறள் உரையாசிரியர்கள், தங்களது பாடையைப் பார்த்துக் கொண்டு எழுதினார்கள். அவர்களுக்குப் பின் யார் வருவார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.

தன் கருத்தே எதிர் காலக் கருத்தென்று நினைப்பது, பொருள் மாற்ற விஞ்ஞானத்தை அறியாதவர்களின் செயல்.

பொருள் பீறிட்டு வேகமாக மாறுகின்ற போது - மனிதன் மட்டும் மாற மாட்டானா? காலச் சுழற்சி அல்லவா அது?

நேற்றைய கருத்தே - இன்றைய கருத்து என்று கூறுவதற்குப் புது வருடம் எதற்காக? காலண்டர் ஏன்?

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த நோக்கின் தத்துவத்தில் நாம் வளர்ந்தவர்கள்.

நமது திருக்குறள், எல்லோருக்கும் சொந்தமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஒருவருக்கே அது உரிமையாகாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சைவத்தின் கருத்து, வைணவத்தின் கருத்து, சமணத்தின் கருத்து, பௌத்தத்தின் கருத்து, இசுலாமியத்தின் கருத்து, கிறித்துவ[illegible]களின்

கருத்து, திருக்குறளிலே இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்ளலாமே தவிர, ஒவ்வொரு மதத்திற்கும் அது சொந்தம் என்று கூறும் துணிவுடையோர் இன்னும் பிறக்கவில்லை என்பதை உணர வேண்டும்.

ஏனென்றால், திருவள்ளுவரது சிந்தனை- கருத்து வண்ணங்கள் - இதுவரையில் ஆய்வு நிறக் கலையில் தேர்ந்தவனுக்கே தடுமாற்றத்தைத் தருகின்றது.

திருக்குறள் என்பது ஒரு வண்ண ஜாலம்! நாத மர்மம்! கருத்துச் சூழல்! சிந்தனை மயக்கம்! அறிவின் சோதனை! தேர்வு பெற முடியாத தேர்தல்! குறி பார்த்தடிக்க முடியாத குறி!.

விஞ்ஞான ஆய்வுக்கே ஏற்பட்ட பெரலட்டிக் - அதாவது பாரிச வாய்வு!

மேலும், ஒரு படி தாண்டிச் சொல்லப் போனால், மனிதன் உரை எழுதித் தெளிவு பெற வேண்டிய நூலல்ல - திருக்குறள்!

மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒருவன் - இனி பிறந்தால் பரவாயில்லை என்று நினைக்கின்றேன்! ஏனென்றால், உரைகள் கலவரத்தில் முடிகின்ற காரணத்தை வைத்து,

அய்யன் திருவள்ளுவருக்குப் பின் வந்த ஆராய்ச்சி நூல்கள், பொருள் விசாரணை நூல்கள், மனோதத்துவ நூல்கள், விஞ்ஞான நூல்கள் அனைத்தையும் கரைத்துக் குடித்த ஒருவன் கூட - திருக்குறளுக்கு நேரிடையாகப் பொருள் கூற முடியவில்லையே - ஏன்?

ஏனென்றால், தமிழுக்கு உயிர் நூல்களை எழுதிய தன்னேரிலா அறிவு அரிமாக்கள் அனைவரும் - சூத்ர வடிவில், யாப்பு செய்யுள் வடிவில், நுட்பம் செறிந்த செஞ் சொற்களைப் பெய்து, மந்திரம் - மறை போன்ற பொருளாட்சிகளைப் புதையல் போல் வைத்துள்ளார்கள். திருவள்ளுவம் என்றால் என்ன என்பதை நீங்கள் கூற வேண்டும். உங்களது எல்லையிலே இருந்து அதுவராமல், உலக எல்லையிலே இருந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

எனவே, மனிதன் என்பவன் எந்த நூலை எழுதினாலும், படித்தாலும், கேட்டாலும், மாசிலா மனமுடையவனாக இருந்தால்தான், எதை அவன் கேட்கிறானோ, அதன் உண்மைப் பொருளைக் காண முடியும்.

இவ்வாறான மறை பொருட்கள் திருக்குறளிலும் உண்டு!

அவற்றை ஆழ்ந்து கூர்ந்து, ஓர்ந்து படிக்க வேண்டிய பொறுப்பு தமிழறிவுடையார் கடமை அல்ல - உரிமை!

தமிழ் மொழியில் அத்தகைய சங்க கால நான்மறைகளும், தமிழ் மறைகளும், திருமந்திரங்களும், பாசுரங்களும், அறச்சொற்களும் ஏராளமாக உள்ளன. அவற்றின் உண்மைப் பொருளை அறிய வேண்டுமானால், அதாவது மனிதன் மனம், முழுக் முழுக்க ஒன்றும் இல்லாமல் மாறினாலொழிய, தன் நெஞ்சில் ஒரு துளியும் மதக் கருத்து, சாதிக்

கருத்து, நாகரிகக் கருத்து, பண்பாட்டுக் கருத்து இல்லாமல் மாறினாலொழிய, திருக்குறளுக்கு உண்மைப் பொருளைக் காண முடியாது.

ஏனென்றால், திருவள்ளுவர் ஒரு திறந்த வெளி! ஒன்றுமில்லாத நிலையில் ("Status of nothingness and total negation without identification, secured by full freedom based on emptyness") இருந்து எழுதியவர்.

எழுதிய அய்யன் திருவள்ளுவன் - இல்லாத நிலையிலிருந்தால் - உரையாசிரியன் இருக்கின்ற நிலையிலிருந்தால் - குறள் உரை தெளிவாக இருக்க முடியுமா?

மதமே இல்லாத மனிதனால் எழுதப்பட்ட ஒரு நூலை, சக்தி வாய்ந்த ஒரு மதத்தின் முப்பிரிவுகள், அய்யன் திருவள்ளுவரைக் குறிப்பிட்ட ஒரு மதவாதியாக்க, அதுவும் - இயேசு நாதருக்குச் சீடராக்கி மகிழ்ந்திட அமெரிக்கப் பணமழையின் ஒருமைப்பாட்டோடு பணிகளாற்றுமா?

திருக்குறளுக்கு உரை கண்ட தொல்லாசிரியர்களான காளிங்கருக்கோ, மணக்குடவருக்கோ, பரிமேலழகருக்கோ, பிறருக்கோ இப்படிப்பட்ட விவாத மன்றங்கள் இன்று வரை கூடினவா?

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், மொழி, நூலறிஞர் பண்டித தேவ நேயப் பாவாணர், திருக்குறள் பீடம் அழகரடிகள், திருக்குறளார் வீ. முனிசாமி, கப்பலோட்டிய வ.உ.சிதம்பரம் பிள்ளை, தமிழ்த்தென்றல் திரு.வி.க. பாவேந்தர் பாரதிதாசனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, புலவர் குழந்தை, சாமி சிதம்பரனார், டாக்டர் மு. வரதராசனார் ஆகியோரது குறட்புலமைக்குக் கூட இத்தகைய ஆய்வரங்கம் இன்றுவரை ஏற்பட்டதில்லையே!

இருந்தாலும் - இந்த நேரத்தில் இதே கிறித்துவ அன்பர்களும் தமிழ் அடிமைகளே - கால்டுவெல்லைப் போல- ஜியூபோப்பைப் போல - வீரமா முனிவரைப் போல!

கிறித்துவக் கண்ணோட்டம் திருக்குறளைப் பார்ப்பதினால்- வேறொரு கோணத்தில் நோக்கும் போது, தமிழுக்கு உயர்வே கிட்டுகின்றது - அதை நாம் மறக்க முடியாது.

திருக்குறள் மத நூல் அல்ல, வாழ்க்கைக்குரிய சட்ட நூல்! வள்ளுவம் கூறும் நீதி நூல்!

வேண்டுமானால் இவ்வாறு கூறலாம், அய்யன் திருவள்ளுவர் காலத்திலே ஆதிக்கம் பெற்றிருந்த வைதிக மத கருத்துக்களை ஏற்று, அவற்றை மறுத்து, மதச் சார்பற்ற தமிழர் நெறிகட்குத் தனித்துவம் தந்துள்ளார் என்று, நீங்கள் தான் அதற்குக் கட்ட வேண்டும் நியாய வரம்பு!

மதநூல் என்றால், அதிலே மாயம் இருக்கும்! அற்புதம் கூத்தாடும்! அறிவு நம்பாத ஆச்சரியங்கள் இருக்கும்! விஞ்ஞான வளர்ச்சிகள் அதைக் கண்டு விலா நோகச் சிரிக்கும்! திருக்குறள் அத்தகைய ஒரு நூலல்லவே!

மதமே கூடாது, என்பவனும், மதமே தேவை என்பவனும் திருவள்ளுவன் அல்லன். இவன் இரண்டுக்கும் இடையே, மலைக்கு நடுவே ஒடுகின்ற அருவி.

பொதுவாகப் பார்ப்பவன் மனிதனானான் - குறிப்பாகப்

பார்ப்பவன் மதவாதியானான்.

'செரிக்காத ஆசைகளை வைத்திருந்தவன் சொர்க்கத்தை நாடுவது வாடிக்கை' என்றான் - கார்ல் மார்க்சு!

தேவையான ஆசைகளைப் பூர்த்தி செய்துக் கொள்பவன், திராணியுள்ள மனிதன் என்றான் - ஏஞ்சல்சு• ஆனால், அய்யன் திருவள்ளுவர் - மனக் கலவரத்திலே ஈடுபட்டுத் தன்னைத் தாக்குப் பிடிக்காதவர்களுக்கே திருக்குறள் செய்தார்.

மனம், என்ன என்பதை விளக்குவதற்குப் பதில், திருவள்ளுவர். அதிலிருந்து தப்பிப்பதற்குரிய வழிகளைச் சொன்னார். 'மனத்தின் கண் மாசிலனாதல்' என்ற நிலையை உருவாக்க நினைத்தார்!

மனம் என்றால் என்ன என்பதைக் கூறிய பிரான்சு நாட்டுத் தத்துவவாதிகளான ஆல்பிரைட் கேமு வைவிட, ஜீன்பால் சாத்தேயைவிட, தப்பிக்க முடியா மனத்திலிருந்து, தப்பிக்க வழி கூறிய ஒரே ஒரு உலக தத்துவவாதி திருவள்ளுவரே!

வெறும் டைலக்ட்டிகல் அனாலிசு என்று சொல்வார்களே, அதை திருவள்ளுவர் செய்யவில்லை.

அப்படிச் செய்திருந்தால், அவர் பாமர மக்களிடையே வந்து சேர்ந்திருக்கமாட்டார் - படித்தவர்களிடையே சென்று சேர்ந்திருப்பார்.

மனம் உள்ளவரை மாச்சர்யங்கள் உண்டு. அதன் அடிப்படையில் ஒழுக்கங்களைக் கற்பிப்பது இமாலயப் பிரச்சனை.

'நீங்கள் வெறுமனே இருங்கள்' ("Be in nothingness") என்று கூறுவதற்குப் பிரெஞ்சு நாடு காத்திருக்கிறது.

ஆனால் 'எண்ணங்கள் உள்ளவரைதான் மனிதன்', என்ற தத்துவத்தை 1962 - ஆம் ஆண்டுக்கு முன்பேயே சிந்தித்துவிட்டான் திருவள்ளுவன்.

இவனுக்கு வால் நட்சத்திரம் முளைக்கவில்லை - மாட்டுக் கொட்டகை ஏதும் இல்லை. என்ன இருந்தாலும், நம் நாட்டவர்கள் ஒரு மனிதனை தெய்வமாக்குவது இல்லை, அறிவிலே நுட்ப ஞானத்தைப் பாராட்டினர். அதற்கு வைதீகன் ஆன்மீக சாயம் பூசி விட்டான் அவ்வளவு தான்.

இப்படிப்பட்ட ஒப்பற்ற ஒரு தத்துவ விதையிலே இருந்து, உலக மூலச் சக்தியிலே பிறந்து, விளக்க முடியாத ஒருவராகி, தமிழ் எழுத்துக்களால் வாழ்வறிவு வண்ண மாயங்களைச் செய்த ஒரு மனிதரை - புலவர் தெய்வநாயகம் மத விசாரணை விசாரிக்க வந்திருக்கிறார்.

இந்த விசாரணையில். நீங்கள் பெற்ற பட்டங்களை அடகு வைப்பீர்களோ! - மீட்டுக் கொள்வீர்களோ! - அது எனக்குத் தெரியாது.

மனித இனம் இருக்கின்றதே, இந்தியாவைப் பொறுத்தவரை - அது ஏழாயிரம் - எண்ணாயிரம் ஆண்டுகளின் சரக்கு!

அதற்கு மேல் சரித்திரமில்லை - அதனால், இவனுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை.

திருக்குறளின் எழுத்துக்கள் - வைதீக அடிப்படையில், வானத்திலிருந்து வந்தவையென்று புளுக எனக்கு விருப்பமில்லை - என்னால் முடியாது.

மிருகத்தைவிட - ஒரு மனிதன், மனிதத்தில் ஒரு மனிதன் இவ்வளவு தான் சிந்தித்திருப்பான் என்பது எனக்குத் தெரியும். ஆனால், திருக்குறளின் எழுத்துக்களில், நீண்ட காலச் சரித்திரமோ, குறுகிய கால இலக்கியமோ, தெரிவதற்குப் பதில், இனி முட்டைக்குள் முட்டையாக இருந்து முகிழ்ப்பதற்குக் காலம் பார்த்துக் கொண்டிருக்கின்ற மனித வர்க்கத்தை, நீ இப்படித்தான், இருப்பாயென்று, அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுகின்ற ஆற்றல் - அந்த நெசவாளிக்கு மட்டும் எப்படி முடிந்தது?

அவருக்கென்று ஒரு மதம் இல்லை, அவ்வளவு தானே ஒழிய, வேறு என்னவாக இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

இத்தகைய திருவள்ளுவரை இந்த ஆய்வு மாநாடு என்ற போர்க்களத்தில் நீங்களும் சந்திக்கின்றீர்கள் - புலவர் தெய்வநாயகமும் சந்திக்கின்றார்.

நீங்கள் இருவரும், காலமாகிக் காணாமல், கலந்த காற்றிலே திருவள்ளுவரைத் தேடுவதற்காக முனைகின்றீர்கள்.

'பார்வை ஒழுங்காக இருப்பவர்களுக்கு பாதாளம் தெரியும்' என்றான் அரிடாட்டில்,

திருக்குறள் ஆழத்தை நோக்கி இறங்குவதற்கு வந்திருக்கின்ற தண்டமிழ்ச் சான்றோர்களே!

உங்கள் முன்னால் விரிக்கப்பட்ட ஆறு கிறித்துவப் புத்தகங்கள் வழியாக, நீங்கள் உதிர்க்கின்ற கருத்துக்கள், இருபதாம் நூற்றாண்டுத் திருவள்ளுவரைக் காட்டுவதற்காகவாவது அமைய வேண்டும் என்பது என் போன்றோரின் ஆசையாகும்.

பல நூற்றாண்டுகட்கு ஒரு வள்ளுவராகப் பிறப்பவர் தான் திருவள்ளுவர்!

இதுவரையில், கடவுள்தான் நினைவில் நிற்பவன் என்று தத்துவங்கள் கூறுகின்றன.

வேதங்களையும் - அதற்குச் சாட்சியாகக் கோயிலையும் - பூசையையும் காட்டுகின்றனர் வேதாந்திகள்!

அருள் கூர்ந்து, நீங்கள் அய்யன் திருவள்ளுவரைக் கோயிலில் இல்லா இறைவனாக, பூசையில்லா இறைவனாக, மனித நேய மனிதத்தில் மணக்கும் மனமாகக் காட்ட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

திருவள்ளுவர் கிறித்துவரா? என்ற வினாவை எழுப்பி அதற்காகப் பொருட் செலவு செய்து தோல்வி பெறுவதைவிட, அருட்டிரு டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் "Humility. Charity. and forgiveness of injuries being christian qualities are not described by aristotle... Now these three are fcorcibly inculcated by the Tamil moralist! these are the themes of his finest verses. So far, then we may call this Tamil poet a christian."

'அடக்கம், அறம், பாவமன்னிப்பு' என்பன கிறித்துவ இலட்சியங்களாக இருந்தும் கூட, அவற்றை அரிஸ்டாடில் தமது நூலில் குறிப்பிடவில்லை. தமிழ் அறநெறியாளரான திருவள்ளுவர் இந்த

மூன்றையும் மிக வலிமையாக மக்கள் மனத்தில் பதியவைத்துள்ளார். அவருடைய அருமையான செய்யுட்களுக்கு - இவைதாம் ஆய்வுப் பொருட்களாக உள்ளன. எனவே, நாம் அந்த தமிழ்க் கவிஞரை ஒரு கிறித்துவன் என்றே அழைக்கலாம், என்று குறிப்பிட்டார்,


திரு டாக்டர் போப் அவர்கள் கிறித்துவத் திருமறைக் காவலராக இருந்ததினால் தான், May call என்ற வார்த்தையை ஆட்சி செய்துள்ளார். திருக்குறள் ஆய்வு மாநாட்டினர்களைப் போல, திருவள்ளுவரைக் கிறித்துவராக ஆக்கிட விரும்பவில்லை. காரணம், அவர் ஒரு மத எல்லையின் காவலராக இருந்ததால், தன்னை உயர்த்திக் கொண்டார்.

'உலகப் பார்வையில் தமிழ் மறை' என்ற தலைப்பில் இக்கட்டுரையை எழுதும்போது, சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டுச் சம்பவத்தை ஏன் குறிப்பிட்டோம் என்றால், இந்த மாநாட்டில் திருவள்ளுவர் கிறித்துவரல்லர் என்ற இந்த மாநாட்டின் முடிவை, சென்னை மாநாட்டார் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு வெளியிட வழங்காமல், இரும்புத் திரையிட்டு மறைத்து விட்டார்கள்.

மலேசிய மண்ணில், பினாங்கு நகரில் 1932 - ஆம் ஆண்டு பிறந்த நான், மலேசியா நாட்டில் நடைபெறும் உலகத் தமிழ்மறை ஆராய்ச்சி மாநாட்டிலாவது அது வெளிவரட்டுமே, வந்தால், மாநாட்டிற்கு வருகை தரும் உலக அறிஞர் நினைவில் பதிவாகாதா? என்ற தமிழ்மறை வேட்கையால் சுருக்கமாக எழுதியுள்ளேன். வெளியிடுவது பற்றிய முடிவு தங்களது தொண்டு - விருப்பம்.

எனவே, திருவள்ளுவர் பெருமானுடைய பாதை - மக்கள் வாழ்வியலின் எல்லாத் துறைகளிலும் தனி ஒரு பாதை - பொதுவான பாதை- யாரையும், எவரையும் நல்வாழ்க்கைப் பயணத்திற்கு அழைத்துச் செல்லும் அறம் சார்ந்தப் பாதை• நம்பி ஏற்கத் தகுந்த துணிந்த தமிழ்மறைப் பாதையாகும்.

அன்பன்
என்.வி.கலைமணி



புலவர் என்.வி. கலைமணி

# அறிஞர் அண்ணா

புலவர் என்.வி. கலைமணி

தனிச் சிந்தனையின் பாற்பட்ட ஓர் ஒப்பற்ற மூளையின் 'நியாயமான பணியை' அறிவின் அடையாளம், என்கிறான் உலகம் போற்றும் கவிஞன் ஷெல்லி.

'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பது அய்யன் திருவள்ளுவரது பொய்யாமொழி!

அந்தத் தத்துவத் தோன்றல்கள் தோன்றிய திங்கள்தான் ஆண்டாண்டு தோறும் நமை நோக்கி நாடி வரும் செப்டம்பர் திங்கள் நினைவுகள்!

திராவிடர் இனமெனும் சோலையிலே பூத்த ஞானப் பூக்களின் நறுமணமாய், தந்தை பெரியார் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்களே, கழக மேடைகளில் நீவிர் இருவரும் ஆற்றிய சமுதாயச் சீர்திருத்த அறிவிதழ் அறிவுரைகளை நாங்கள் நாள்தோறும் கேட்டுக் கேட்டுத் தான் புது மலராய்ப் பூத்து நாட்டில் மணம் பரப்பி வரும் தொண்டர்களானோம்.

புல் நுனியின் பனித்துளிகளாய் வைகறை ஒளியிலே மின்னி மின்னித் தங்களது அரசியல் எண்ணங்களை அன்றாடம் எமக்கு விளக்கி, அறிவித்த தந்தையே ; தமையரே ;

சேரன் தம்பியின் சிலம்பு; சங்க இலக்கியப் பாக்களின் செஞ்சொற்கள் ; வள்ளற் பெருமானின் பாடல்களில் இன்சுவைகள் அத்தனையும் ; தங்களது அரும் நூற்களைக் கற்க கற்கப் பண்பூட்டி வளர்க்கும் தாய்ப்பாலாய் சுரந்தூட்டுவதைச் சுவைத்துச் சுவைத்துப் பருகி அறிவு பெற்றவர்கள் நாங்கள்!

தமிழர் வாழ்வை வேற்றினப் பகைகள் கருக்கும் காலங்களில் எல்லாம், கார்முகிலின் மின்னல்களெனக் கனல் தெறிக்கும் கண்டனங்களைக் கோடை இடிகள் போல இடித்து உங்களுடைய எச்சரிக்கை ஒலிகளை உமிழ்ந்து வந்த திராவிடர் இன இயற்கைச் சக்திகளே!

தங்களது சக்திகள் பொழிந்த கனமழையின் தண்ணமுதப் புனல் தெளித்து ; வார்கடலின் அலை ஓசை நயங்களாகச் சொரிந்த நீர், வற்றாத சுனைகளாய் எம் இதயத்துள் இனமான உணர்வுகளை நாள்தோறும் வளமாய்ச் சுரப்பதற்கு ஊற்றுக் கண்களாக விளங்கி வரும் எமது முன்னேறுகளே ;

அந்த ஊற்றுகள் அருவியாகி, ஆறுகளாகி வகை வகையான இன எழுச்சி நன்னெறிக் கொள்கைப் பயிர்களை உலகின் வளர்ச்சிக்கும், வறுமை ஒழிப்புக்கும் பொருளாதார மகிழ்ச்சிக்கும் உயிர்ப் பளித்து வந்த வேளாண் பிரிவுப்

பெருங்குடி மக்களின் 20 - ஆம் நூற்றாண்டுத் திராவிடரியக்கத் தலைமை விவசாயிகளே ! தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்களே!

பறவைகளின் 'நா' இசைக்கும் இசைகளாய் எமைப் பாட வைத்து, பாய் புனலின் பேராற்றலே, அவற்றுள் பண்புச் சுவைகளாய்ப் புகுத்தி, ஊர்தோறும் திராவிடர் வரலாற்றைப் பாட வைத்துக் கொள்கைக் குயில்களாய்க் கூவ வைத்த தலைவர்களே!

கறவைகள் அருந்தும் நீரெலாம் அதன் மடியில் சுரக்கும் பாலமுதமாவதைப் போல, எமது தண்டு வட நரம்புகளின் நாடித் துடிப்புகளிலே அந்த மானப்பாலைப் பாயவிட்டு, 'கா' விலே விரவிடும் பூங்காற்றாய் எமை மக்களிடையே நடமாடிடப் பயிற்சி தந்த பகுத்தறிவுப் பாசறை பகலோனே! தந்தை பெரியாரே ! பண்புடைமையைப் போதிக்கும் நிலவோனே! அறிஞர் அண்ணாவே!

அந்த அற்புத கனலொளியால், புனலொளியால் எமது அகத்தை ஆண்டு - அடக்கி, நறுமணத்தை நாசியால் ஏற்றி, புதியனவாய் பூக்கும் பூவழகாய்ப் புதுப்புதுக் கழகத் தொண்டர்களைப் பூக்க வைத்துத் தன்மானமேற்றிப், 'பழையன கழிதலும் புதியன வழுவல புகுதலும் கால வகையினானே' என்ற தத்துவத்தை நிர்வகித்த தலைவரேறுகளே!

ஓடத்திற்கும் தண்ணீருக்கும் சம்பந்தம் உண்டென்றாலும், ஓடம் தானே ஓட வேண்டும் தண்ணீர் மேல் ; ஓடத்துள் ஓடலாமா தண்ணீர் ? என்பதைக் கட்சிக் கட்டுப்பாட்டிற்கும், ஆட்சி நிர்வாகத்திற்கும், இலக்கண விளக்க அரிச்சுவடிகளை உலகுக்குக் கற்பித்த சிந்தனைச் சிற்பிகளே! கழகத்துள் நீங்கள் உருவாக்கித் தந்த தோழமை உணர்வுகளை, 'தம்பி, எனும் குடும்பப் பாச உறவு முறைகளை எவ்வாறு மறப்போம் அண்ணா? உண்டோ உய்வு மறந்தால்?

கோணல் மரத்தை நூல் கொண்டு நேர் செய்யலாம்; ஏன், கோணல் அறிவுரைகளையும் 'நூல்' கொண்டு நேர் செய்யலாமே! ஆனால், தந்தையே தமையரே, நீவிரிரு வரும் சில நாணல் மனங்களை எவ்வாறு ஐயன்களே இயக்கக் குடும்பத்துள் நேர் செய்தீர்கள்?

மனமாச்சர்ய ஆற்று வெள்ளத்தால் வேரொடு பெயர்ந்து விட்ட அந்தக் கட்சி நாணல்களை மீண்டும் கழக ஆற்றோரக் கரைகளிலே நட்டுப் பயிராக்கிக் காட்டினீர்களே அதெப்படி தந்தையே ? எவ்வாறு அண்ணனே உங்களால் முடிந்தது?

தேள் மட்டுமா கொட்டுகின்றது? தேனீக்களும் கொட்டவில்லையா? என்ற உடல்வலி உபாதைகள் தரத்தை உலகுக்கு உணர்த்திக் காட்டினீர்களே அதுதான், அகழ்வாரைத் தாங்கும் நிலமோ?

ஓர் அரசியல் பெரும் பண்ணையாளராகத் திகழ்ந்து ஆட்சியெனும் முப்போக அறுவடையாளராக 1967 - ஆம் ஆண்டில் திகழ்ந்தார். இஃது ஓர் உலக அரசியல் அற்புதமன்றோ?

அந்த அறுவடைக் களஞ்சியத்தைத் தந்தை பெரியாரின் தாளிலே கொண்டு போய் அறிஞர் அண்ணாவே காணிக்கையாக்கியபோது, தந்தை அதைக்கண்டு மெய் சிலிர்த்துப் பேரின்பம் பெற்ற நிலையில், நீரல்லவோ திராவிடரியக்கச் சான்றோன் என்று ஊரெலாம் அதைக் கூறிக் கூறிக் களித்தீரன்றோ தந்தையே! இக் காட்சி எமக்கெல்லாம் ஓர் இனமானப் போராட்டப் பெருமையாகக்



கண்டு களித்தோமே ஐயா ! எந்த உலக நாடுகளிலய்யா இந்த அரசியல், சமுதாயச் சம்பவம் நடந்து?

அறிஞர் அண்ணா அவர்களே ! ஒரு கட்சியின் கொள்கைகளில் பாலும் - நீரும் போல இரண்டறக் கலந்து விட்ட குடும்பப் பாசப் பிணைப்பு, நீர் தந்த தத்துவம் தானே! அதனாலன்றோ அண்ணா நீங்கள் பேசும் போதெல்லாம் எழுதும் போதெல்லாம், 'தம்பி உடையான் படைக்கஞ்சான்' என்று அடிக்கடி கூறிக்கூறி எமது குருதியிலே வண்ண மானீர்! அவ்வுறவுக் கொடையையாம் எப்படியண்ணா மறப்போம்?

வயிற்றிலே கோரோசனை உள்ள மாடு கலங்கின தண்ணீரைக் குடிக்காது. பிற மாடுகள் உண்ட பசும் புல்லையும் கூட அது உண்ணாது. இஃது சான்றோர் இயல்பல்லவா? என்பதை இனமான உணர்வுக்காக நீர் சுட்டிக் காட்டிய எடுத்துக் காட்டு தானே!

கற்களிலே சில வகைகள் உண்டு. ஒரு கல் இல்லத்தை அழகூட்டிப் பொலிவுபடுத்தும் ; மறுகல் பள்ளம் மேடுகள் ஏறி இறங்கிடப் பயன்படும். இன்னோர் கல் மாமல்ல புரமாகும் ; திருச்சி மலைக் கோட்டையாகும்.

பெண் ஒருத்திதான் அவள் தாயாகி, தமக்கையாகி, தங்கையாகி, தாரம் ஆனதைப் போன்றதே. கட்சியிலும் ஆட்சியிலும் பெரும் பதவிகளின் வாழ்க்கை ஏற்றத் தாழ்வுகள் என்பதைப் பன்முறை தம்பிக்கு மடல் எழுதி

விளக்கம் தந்த அண்ணாவே, எப்படி அவற்றை அரசியல் வாதிகளால் மறக்க முடியும்? 'தம்பி' என்று தலைப்பிட்டு 'திராவிட நாடு'

காஞ்சி ஏடுகளில் எழுதும் போது கழகத் தம்பிகளுக்கு நீங்கள் அறிவுவள மூட்டிட வோர்ட்ஸ் வொர்த்தைப் போல நமது நாட்டின் இயற்கை வளங்களை இயம்பினீர்களே ; டென்னிசனைப் போலத் தாய்மொழியாம் தமிழுக்கு அடுக்கு மொழிக் கற்பனை வளங்களால் ஒரு மறுமலர்ச்சி தமிழ் நடையை உருவாக்கி மறு வாழ்வளித்ததை எப்படி மறப்போம்.

விரக்திகள் உருவான போதெல்லாம் கவிஞன் ஷெல்லியைப் போல, எழுதி ஆறுதல் அளித்தீர்கள். கோல்டு ஸ்மித்தைப்போல நீங்கள் எழுதிய வரலாற்றுப் புரட்சி சம்பவங்களை எங்களால் மறக்க முடியவில்லையே. தங்களது சீர்திருத்த நாடகங்களில் பெர்னாட்ஷா, இப்சன், கான்பூர்த்தி போன்றவர்கள் நடமாடுகிறார்கள் என்று 'கல்கி' பத்திரிகை ஆசிரியர் பாராட்டியதை நாட்டில் யாரே மறக்க, மறுக்க, மறைக்க வல்லாரண்ணா!

கவிஞன் பைரனைப் போல நீங்கள் பேசிய தத்துவப் பேச்சுக்களைப் பைந்தமிழர் மறப்பரோ அண்ணா ! ('பாரதிக்குச் சளைத்தவரோ நீர் - மக்களிடம் நாட்டுப் பற்றை நாட்ட! பாவேந்தருக்குப் பொற் கிழியும் - சிலையும் அமைத்து அவருடைய கவிதைப் புரட்சியைச் சிவிகையில் ஏற்றி அழகு பார்த்தவர் தானே அண்ணா - நீங்கள்!

திராவிடரியக்கத்தில் தோன்றிய தொண்டர்கள், தலைவர்கள் எல்லாம் பருவத்தோடு பொழிந்த தியாக மழைகள் ; அறிவுத் தென்றல்கள் ; அன்பூட்டும் மண் வகை வளங்கள் ; பண்புகள் சேகரித்த புதையல்கள் என்பதை அவரவர் செயற்கரிய செயல்களைச் செய்திட்ட உற்பத்திச் சாலைகளாக உழைத்தவர்களன்றோ தந்தை பெரியாரும் - நீங்களும்! அவற்றை எல்லாம் இந்த செப்டெம்பர் திங்களில் பல முறைகளில் நினைவு கூர்கின்றோமே!

தமிழ் உலகுக்குத் தாழம் பூக்கள் நீங்கள்! உங்களின் இரு பக்கம் முட்கள் எங்களைத் திருத்திப் பக்குவப்படுத்தும் ஒழுக்க ஆசான்கள் ; அந்த அருமை பெருமைகள் எம் போன்ற தோழமைகளுக்குத் தானே புரியும், தெரியும்! அதற்காகத் தானே ஆண்டாண்டுதோறும் நினைவூட்ட வருகிறது செப்டெம்பர்!

அருவியிலே ஓடும் தண்ணீரை அள்ளியள்ளிக் குடிக்க முடியுமென்றாலும், அதிலிருந்து பிரிந்து ஓடி வரும் வாய்க்கால்களில் தானே சுலபமாக முகந்து முகந்துப் பருக முடியும்? அதனைப்போல, அறிஞர் அண்ணா முதல்வர் கலைஞர் ஆட்சிச் சிறப்புகளை எல்லாம் மக்கள் அள்ளி யள்ளிக் குடித்துத் தேவை வேட்கைகளைத் தணித்துக் கொண்டு வருகிறார்கள் அய்யா!

எந்த மலரின் மணமும் அந்தந்தப் பூவோடு அடங்கி விடுவதில்லை. அரும்பி மலர்ந்ததும் மணம் பரப்புவது இயல்புதானே! தமிழ்நாடு என்ற பெயர் 2000 ஆண்டுகளாக ஆட்சித் துறையில் இல்லை. திராவிடரியக்க ஆட்சியில் அல்லவா நமக்குப் பெருமை தேடித் தந்தார்.

சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கித் தமிழ் வாழ்வுக்குச் சுய மரியாதை ஒளியூட்டிய பேராளா! கலைஞர் அவர்கள் இன்று இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியும், ஏழை உழவனுக்கு 2 ஏக்கர் நிலமும் ; விவசாயிகள் பெற்ற கடன் 8,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து திராவிடரியக்க ஆட்சிக்கு நற்பெயரை மக்களிடம் உருவாக்கியதும் அண்ணா ; தங்களது அரசியல் சுவடுகளால்தானே! இவை இனமானம் காக்கும் அரசச்

சாதனைகள் என்று நாங்கள் தைய்யா தக்கா என்று ஆடிப்பாடி மகிழ்கின்றோமோ!

பழங்கள் கொத்துக் கொத்தாய்க் குலையாமல் பலனளிக்கின்ற மரங்களின் கிளைகள், மண்ணை நோக்கித் தாழ்ந்தே நிற்கின்றனவே - ஏன்? பணியுமாம் என்றும் பெருமை என்ற தத்துவத்தைஎங்களிடம் வளர்த்தது யார்? உங்களுடைய அரும் பெரும் உழைப்புக்களால் அல்லவா?

சொற்களின் மதிப்பைச் சொல்லேருழவன் தான் அறிவான்! அதனாலன்றோ எங்களை எல்லாம் மக்களும் - பிறகட்சிகளும் பாராட்டுமளவுக்குச் சொல்லேருழவர்களாக இயக்கினீர்கள்? இவை அய்யாவும் - அண்ணாவும் இந் நாட்டிற்காற்றிய சாதனைகளென்றால் மிகையல்லவே!

துயில் கொண்ட போதும் கூட, நீவிரிருவம் திராவிடர் இன செம்மை வாழ்வென்ற அழகைத் தானே கனவு கண்டீர்கள்! விழித்தெழுந்த போதும் அதே எழிலைத் தானே நனவாக்கும் ஞானக் கடமைகளாகக் கொண்டு மக்கட் சேவைகளை ஆற்றினீர்கள் ! அவற்றின் எதிரொலிப் பலன்களை அனுபவிக்கும் நன்றி மறவா நாய்களான நாங்கள் உங்களுக்கு நினைவுச் சின்னங்களை அமைத்துப் போற்றி வருகின்றோம்! ஏன் தெரியுமா? மறதி மனிதனின் உடற்குருதியாக ஊறக்கூடாது என்பதால் தான்!

பாலிலிருந்து எடுத்த மோர் அல்லவா நமது இன இயக்கம்? அந்த மோரை பிற இனமானம் தாக்கும் போது நாங்களும், மக்களும், எமது தன்மான வேட்கைக் காக்கப்பட அதை பருகிப் பருகிச் சுயமரி யாதை வீரர்களாக உலா வந்து உவகையுறுகின்றோம்.

## "தம்பி உடையான் படைக்கஞ்சான்"

அண்ணா, அந்த மோரிலே கடைந்தெடுத்த வெண்ணெய் 1967-ல் நீங்கள் அமைத்த ஆட்சி! அந்த வெண்ணெயை உருக்கி நெய்யாக மாற்றி, எமது நெஞ்ச உணர்வு உணவுக்குப் பரிமாறி, ஊர் வியக்க, உலகம் மணக்க, வகை வகையான விருந்துக்குள் பெய்து உண்ண வைக்கிறார் கலைஞர் - மக்களை! அந்த வெண்ணெய்க் கூட்டணி தண்ணீரில் மிதக்கலாமே தவிர, கரையயது, உருமாறாது,

அழியாது! திராவிட இனம் போற்ற, புகழ ஆட்சி செய்து வருவது தங்களால் அல்லவா அண்ணா!

மூத்தோர் சொல்லின் முது நெல்லிக்காய் போன்றது அய்யா உழைப்பு, அண்ணா அமைத்த ஆட்சி. அதனைப் போற்றி வளர்க்கும் 84 வயதேறிய கலைஞரின் வைரச் சிந்தனைகள் ; பண்புத் திறன்கள்; அடிக் கரும்பு சுவையாகவன்றோ சுவைக்கச் சுவைக்க மக்களது புலன்களுக்கு இன்றும் இனிப்பூறுகின்றது.

பிஞ்சு மூங்கிலை வளைத்து விடலாம் ; அது தொடக்கக் கால இயக்கத் தோற்றம் ; இன்று திராவிடர்ப் பேரியக்கம் முற்றிய மூங்கில் ; விழுதுகள் பூமியில் பதிந்து விட்ட 'ஆல்'! பன்னூற்றாண்டு தலைமுறைகளின் பார்ப்பனிய எதிர்ப்புக்குக் களைப்பாற நிழல் தரும் தன்மானத்தரு!

சிறுமீன் சினையினும் நுண்ணிதே ஆன அந்த ஆல் விதையை மாபெரும் மரமாக்கி ஊர் நடுவே வளர்த்து விட்ட அய்யாவே அண்ணாவே, நீங்கள் நிழலாகத் தங்கிய காலம் போக, எஞ்சிய எமது வாணாளை அதனடியிலேயே தங்கி இளைப்பாறி எமது தலைமுறைகளும் காலம் கழித்துக் கழக வளர்ச்சியைக் காப்போம் இது வரலாறு கூறும் வாய்மையய்ன்மீர்!

பெண்ணின் வயிற்றிலே பிறப்பவன் எவனும் ஒரு நாள் மண்ணின் வயிற்றிலே இரண்டறக் கலப்பது தமிழ்ப் பண்பாடு எரியில் கலப்பது பார்ப்பனக் கலாச்சாரம். நீங்கள் இருவரும் தமிழ்ப் பண்பாட்டு நாகரீகத்திற்கு வழி காட்டி விட்டீர்களே! பின்பற்றுமா திராவிடர் இனம்?

பிறப்புக்குப் பின் இறப்பு ; இறப்புக்குப் பின் அவரவர் வாழ்க்கைப் புகழின் எச்சம். அதை நிலை நாட்டிட அவரவர் பெற்றோர்களிட்ட பெயர்களே சான்று.

ஈரோடு என்றால் ஈ.வெ.ரா. காஞ்சி என்றால் அண்ணா ; என்று இரண்டு மாணிக்கக் கற்களின் ஒளிச் சிதறல்களே அவரவர் புதை குழிகளையும் மீறி இன்றும் புகழொளி களாகப் படர்ந்து கொண்டிருக்கின்றன.

இதைத்தான் திருவள்ளுவர் பெருமான்,

"நெடுநல் உளனொருவன் இன்றில்லை எண்ணும்
பெருமை உடைத்திவ் வுலக" என்றார். குறள் - 336

அதாவது 'நேற்று ஒருவர் இருந்தார், இன்று அவர் இல்லை என்று சொல்லும் பெருமையை உடையது இவ்வுலகம்' என்பது தமிழ் வேதத்தின் பொய்யா மொழி.

அதற்கேற்ப புகழ் வாழ்க்கை யோடு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும்! இல்லையா கழக நண்பர்களே!

எங்களுடைய பொது வாழ்க்கைக் கனிகளை கொத்தும் அனுபவக் கிளிகள். காயங்களின் சிவப்பு வண்ணத்தைக் கோவைப் பழங்களாக எண்ணி நாள்தோறும் ஆழமாக்கிக் கொண்டே இருக்கின்றன.


தந்தை பெரியார் அவர்களே ; அறிஞர் அண்ணா அவர்களே, அந்த அனுபவக் கிளிகள் உருவாக்கும் வலிகளை மறக்க, உங்களுடைய, உழைப்பெனும் புல்லாங்குழலோசை நினைவுகளையே இராகமாலிகை களாகப் பாவித்து ; ஆறுதலும் - தேறுதலும் பெற்று வாழ்ந்து வருகின்றோம்.

வாழ்க்கைத் தடாகத்திலே மழைக் காலச் சொறியன்களைப் போல உங்களுடைய அன்பை, அறிவை, ஆற்றல், நீங்கள் பிறந்த செப்டெம்பர் திங்களிலே தலைதூக்கி, வான் நோக்கி, தந்தை பெரியார் வாழ்க, அறிஞர் அண்ணா வாழ்க, என்ற குரலொலிகளை எழுப்பிக் கொண்டே இருக்கின்றோம்.

எங்கள் காலண்டரை உருவாக்கிய ஜூலியஸ், சீசரும், அகஸ்டஸ் சீசரும், கிரிகோரி காலண்டர் பாதிரியும் வியந்து கொண்டே விண்மூச்சு விடுகின்றார்களோ என்னவோ - சரியான செப்டெம்பர் கொள்கைப் பைத்தியங்களென்று?

எங்களுக்கும் ஒரு நாள் விழா நடக்கும் ; ஊர்வலம் போகும் ; பாதைகளில் கொள்கை மனங்கள் பவனி வரும் ; அந்த நாள் எமது ஆயுள் நாடகத்தின் கடைசிக் காட்சி ; உறவரங்கப் பிரிவு நாள் ; உயிர் நாடியெனும் சுருதி அடங்கிய நாள் ; எந்த நாளோ .

# "அறிஞர்களின் ஆய்வுகள் !" சர்ச்சைகள் !



புலவர் என்.வி. கலைமணி

அவனி வாழ் மக்களுக்காக, அய்யன் திருவள்ளுவர் பெருமான் தமது சிந்தனைச் செல்வங்களை திரட்டிச் சேகரித்து வைத்துள்ள வாழ்வியல் மானப்புதையல் திருக்குறள். அத்திருக்குறளில்

"ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி." குறள் 25

என்பது ஒரு குறட்பா இக் குறட்பாவுக்குரிய மரபுரை சுருக்கத்தை மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதுகின்ற போது "ஐம்புலன்களையும் அடக்கின முனிவரது வலிமைக்கு அகன்ற வானத்துள்ள தேவர்களுக்கு அரசனாகிய வேந்தனே" (இந்திரனே) போதிய சான்றாளனாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலக்கிய ஆய்வுத் துறைச் சிகரங்களில் ஒரு முகடாக காட்சித் தருகின்ற பாவாணர் பெருமகனார். அவர்களே, இந்த 25- ஆவது குறட்பாவிற்கு இதுதான் எனது திட்டவட்டமான முடிந்த முடிவு, கருத்து என்று இறுதியை அறுதியிட்டு உறுதியாகக் கூறாமல், "சான்றாளனாம்" என்று "ஆம்" போட்டுத் தனது உரையை உரைத்திருக்கிறார். எனவே பரிமேலழகர் உரை அவருக்கு உடன்பாடல்ல என்று புரிகிறது.

பாவாணர் கூறியது மரபுரை ! ஆனால் திருக்குறளுக்கு உரை கண்ட அறிஞர்கள் அவரவர் மதம், சமயம் சாதி, அரசியல் கட்சிகள் ஆத்திக, நாத்திக கண்ணோட்டங்களோடு திருக்குறளை நோக்குவதால், கூறும் உரைகளால், நாட்டில் அறிவுச் சர்ச்சைகள் எழுந்து மக்களைக் குழப்பக் கடலில் தள்ளித் தத்தளிக்க வைக்கின்றன அந்த சர்ச்சைகள் அனைத்தையும் விரித்தால் கட்டுரை நீளும் விரிவஞ்சிய சுருக்கம் இவை :

இந்திரன் என்பவன் தேவர்க்கு அரசனான இந்திரன் என்றார் பரிமேலழகர். காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் கோவில் பூசாரியாக இருந்த ஒருவர் திருக்குறளின் பல இடங்களில் தமது வைதீக மதப் பண்பை புகுத்தி எழுதிய சாதிவெறி ஆய்வை மட்டும் நாம் நீக்கி விடுவோமானால், இன்று வரை இந்த அற்புத உரை போல வேறோர் உரை வந்ததில்லை இனியும் வராது என்பது உறுதி அவ்வளவு இரு மொழிப் புலமை உரை பரிமேலழகர் உரை.

பரிமேலழகர் உரை மீதே சுவடு பதித்து எழுதிய உரை திருக்குறளார் வீ. முனுசாமி உரை. அவரும் வானவர் கோமான் இந்திரன் என்கிறார் தனது உரையில்

திருவள்ளுவர் பெருமானுக்கு அவரது பெற்றோரிட்ட பெயரே என்னவென்று தெரியாமல் இருப்பதைப் போலவே, ஒரு பழைய திருக்குறள் உரையாசிரியர் பெயரும் தெரியவில்லை. அவர் 'வேதங்களில் கூறப்படும் இந்திரனும், திருவிளையாடல் புராணத்தில் வரும் இந்திரனும் இருவரும் ஒருவரோ என அறிய முடியவில்லை" என்று கூறியுள்ளார்.

"வானவர் கோமான் இந்திரன் ஆண்ட அமராவதி என்னும் பட்டிணம் தென்னாட்டிலேயே உள்ளது. அகலிகை, இந்திரன் முதலியவர்களை பற்றிய பழங்கதைகள் தமிழ்நாட்டுக் கோயிற் சுவர்களிலே எழுதப் பட்டிருந்த செய்திகள், 'பரிபாடல்' என்ற, சங்கக் கால நூலில் காணப்படுகின்றது". என்று அதே பழைய உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

புலவர். என்.வி.கலைமணி கள்ளக் குறிச்சி நகரம் உயர்நிலைப் பள்ளியில் 1972 - ஆம் ஆண்டு உவமைக் கவிஞர் சுரதா தலைமையிலும், பனப்பாக்கம் கவிஞர் கு. சீதா முன்னிலையிலும் தென்னாற்காடு மாவட்டம் கவிர் பெருமன்றம் விழாவில் 'மணிமேகலை' காப்பியம் பற்றி ஓர் ஆய்வுரை ஆற்றும் போது, "சீத்தலைச் சாத்தனார் கவிஞர் பெருமகனார் சுட்டப்பட்ட இந்திர விழா எழுந்த காதை'யில் வரும் இந்திரன் யார் ? என்று கூற முடியவில்லையே என்று அன்று குறிப்பிட்டார். அந்த இந்திரன் யார் ? என்ற வினா இன்றும் மரண மூச்சு விடுத்துக் கொண்டிருக்கிறது

திருக்குறளில் வரும் மூன்றாவது அதிகாரமான "நீத்தார் பெருமை"யை, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தனது உரையில், "துறந்தார் சிறப்பு" என்று பெயரிட்டுள்ளார்.

"பொது நல நோக்கோடு இல்லறம் நலம் முழுவதையும் துறந்து, மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கான நோன்புகள் பலவற்றையும் நோற்றுத் தன்னலம் துறந்து வாழ்பவர்களது பெருமையைத் துறந்தார் சிறப்பு என்கிறார் நாவலர்.

திருக்குறள் 25-வது 'பா'வில் வரும் ஐந்து அவிந்தான் ஆற்றல்" எனும் சொற்றொடர்களுக்கு ஐந்து புலன்களாகும். அவாக்களை கட்டுப் படுத்தி அடக்கியவனுடைய வல்லமைக்குப் பரந்த வான் புகழ் கொண்டோரின் மிக உயர்ந்தோனாகக் கருதப்படும் இனிய, திறமை மிக்க அறிவாற்றலில் சிறந்த சான்றோனாகக் கருதப்படும் அறிவனே தக்க சான்றாவான். என்று தனது பொழிப்புரையில் அவர் கூறுகிறார்

'அகல் விசும்புளார் கோமான், பரந்த வான் புகழ்க் கொண்டோரின் மிக உயர்ந்தோர் இந்திரன் இந்திறன் இனிய திறமை மிக்க அறிவன் 'ற' கர, ர கரப் போலியாகவும் கொள்ளப்படும் பாட வேறுபாடாகவும் கருதப்படும் என்கிறார் நாவலர்.

ஐம்புலன்களையும் அடக்கியவர்களில் மிகச் சிறந்தவரும், வான் புகழ் கொண்டவர்களில் மிக உயர்ந்தவருமான ஒரு சிரியோரே விசும்புளார் கோமான் என்று இந்திரன் குறிப்பிடப்படுகின்றார் - நாவலர் அவர்களால் !

இந்திறன் என்ற சொல், பிற்காலத்தில் 'இந்திரன்' என்று திரிபுற்றதாக ஒரு வழக்கு உண்டு. எடுத்துக் காட்டாக, ஐந்திறம் என்பது ஐந்திரம் என்ற பாட வேறுபாடு அடைந்து உருக்குலைந்தது போன்று 'இந்திறன்' என்பது 'இந்திரன் என்று உருக்குலைந்திருக்கிறது பிற்கால ஏடுகளில்.

"பண்டித அ.கி. பரந்தாமனார் அவர்கள், "தொல் காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்". என்ற நூலில் பக்கம் 18,19ல் பழைய ஓலைச் சுவடிகளில் வல்லின 'ற' கரத்திற்கும் இடையின 'ர' கரத்திற்கும் வேறுபாடல் காண்டல் அரிது. இவ்வறியா நிலையில் 'ஐந்திறம்' என்பது 'ஐந்திரம்' என எழுதப்பட்டிருக்கிறது. அதில் வியப்பு இல்லை என்று அ.கி.ப. குறிப்பிட்டுள்ளார். அது போல இந்திறன் என்ற சொல்லும் இந்திரன் ஆகி இருக்கக் கூடும்.

வடமொழியாளரின் கற்பனைப் புராணக் கதைப்படி ஐம்புலன்களையும் அடக்க மாட்டாமல், அகலிகையைப் புணர்ந்து கௌதம முனிவரால் சாபமிடப்பட்ட அருவருப்பான தோற்றத்தைப் பெற்று உலாவிய இழிமகனான இந்திரனை இக்குறளோடு பொருந்திப் பொருள் கூறுவது எந்த வகையிலும் பொருந்தாது.

'ஐம்புலன்களையும் அடக்கிய ஆற்றல் மிகுந்த ஒருவரின் வலிமைக்கு அந்த இந்திரனை உவமையாகக் கொண்டு வள்ளுவப் பெருந்தகையார் கூறுவார் என்று எண்ணுவதற்குக் இடமில்லை

எனவே, நாவலருரை, 'இந்திரன்' என்ற சொல், ஆராய்ச்சியில் மற்ற புராணப் பித்து உரையாளர்களை மலைச்சிகரம் போல் ஓங்கி, உயர்ந்து நின்று உறுதியாக மறுக்கின்றது.

வித்யா ரத்தினம் டாக்டர் பி.எஸ் சுப்ரமணிய சாஸ்திரி என்பவர் திருக்குறள் அறத்துப் பாலுக்கு பாலுரை என்ற ஓர் உரை எழுதியுள்ளார். திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத தம்பிரான் சுவாமிகளவர்களால் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நினைவுத் தமிழ்ப்பரிசு என்ற பரிசைப் பெற்று உருவான நூல் அது. 'இந்திரன்' என்ற சொல்லுக்குச் சமம் ஆய்வு விளக்கத்தை எவ்வாறு வழங்கியுள்ளார் என்பதையும் படியுங்கள்

இந்த உரையாசிரியர் பரிமேலழகர் இனம், இவர் நீத்தார் பெருமை, அதிகாரத்துள் பார்ப்பன வஞ்சக சித்து விளையாட்டுகளை ஆடியுள்ளார். என்ன அந்த ஆட்டங்கள்.

"நீத்தார் பெருமை அதிகாரத்தில் உள்ள 5வது குறளான 'ஐந்தவித்தான்' என்ற குறள்பாவை 8-ஆவது குறட்பா உள்ள இடத்திலும், 8வது குறளாக வரும் 'நிறைமொழி மாந்தர்' எனற குறளை 4வது இடத்திலும் மாற்றி வைத்து உரை எழுதியுள்ளார்

7வது குறட்பாவாக அதே அதிகாரத்தினுள் வரவேண்டிய "சுவை ஒளி ஊறு ஓசை" என்ற குறளை 5 ஆவது இடத்திலே மாற்றி வைத்து உரை கண்டுள்ளார் சாஸ்திரி

திருக்குறள் பாடல் வரிசைப்படி வரவேண்டிய 9வது குறளான "குணமெனும் குன்றேறி நின்றார்" என்ற 'பா'வை, அதே அதிகாரத்தில் 7ஆவது குறளாக இடம் மாற்றி வைத்து உரை எழுதியுள்ளார் - அவர்

இவ்வாறு சாஸ்திரி திருக்குறள் 'பா'க்களை இடம் மாற்றி மாற்றி உரை எழுதியுள்ளதால் திருக்குறள் அதிகார வரிசைப்படி 5 ஆவது இடத்தில் வர வேண்டிய ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான், இந்திரனே சாலுங்கரி, என்ற குறள், சாஸ்திரியின் இடமாற்றம் எண்ணத்தின்படி அக்குறள். அதே அதிகாரத்தில் 8வது இடத்திலே இடம் பெற்றிருக்கிறது.

உரை எழுதிய சாஸ்திரி இடம் மாற்றி மாற்றி எழுதியதற்கு என்ன காரணம் என்றால் அது இதுதான்.

நீத்தார் பெருமைகளே பெருமை. அவற்றை எண்ண முடியாது. அவை உலகில் பிரகாசிக்கும் அப் பெருமையை அவர்களுடைய மந்திரம் காட்டும் ; அவர் சப்த - ஸ்பர்ச - ரூப ரஸ சந்தங்களின் வகைகயை அறிந்திருந்தால் அவராலே உலகம் நிலைக்கும் ; பிறரால் செய்ய முடியாதவற்றை அவர் செய்வார். அவருக்கு வரும் கோபத்தின் பயனை ஒரு நிமிஷமாயினும் தடுக்க முடியாது ; அதற்கு இந்திரனே சாக்ஷி ; அவரையே அந்தணர் என்று கூறுவர். அவரே மோக்ஷத்திற்கு விதை ; என்று ஆசிரியர் (திருவள்ளுவர்) கூறினார் என்கிறார் உரையாளர் சாஸ்திரி என்ற பார்ப்பனர் ! அதாவது பரிமேலழகரின் வாரிசு !

மேற்கண்ட காரணத்தைக் கூறும் உரையாளர் சாஸ்திரி, என்ன கூற வருகிறார் என்றால் அந்த இடத்திலே தான் திருக்குறளை ARIYANIZATION ஆரிய இலக்கியமாக்கி இருக்கிறார். என்ன அந்த பார்ப்பனீயம் !

"இந்திரன் தான் திருவள்ளுவர் கூறும் அந்தணர் ; அதற்கு அவருடைய செயலே சாட்சி ; அவர் ரஸம் ; ரூபம் ; ஸ்பர்சம் ; சபதம் ; கந்தம் இவற்றின் ப்ரக்ருதி , விக்ருதினை அறிந்தவர் ; அவரே மோட்சத்திற்கு விதை ; என்ற காரணப் பழியை திருவள்ளுவரே கூறுகிறார் என்று திருவள்ளுவர் பெருமான் மீதே அப்பழியைச் சாஸ்திரி சுமத்துகின்றார்.

திருக்குறளில் கயமை என்று வரும் அதிகாரத்துள் 1076 ஆவது பாடல் ஒன்றுண்டு.

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உயத்துரைக்க லான்"

"தாம் தம் காதாற்கேட்ட மருமச் செய்திகளை கொண்டு சென்று பிறர்க்கெல்லாச் சொல்லுதலால், கீழ் மக்கள் விளம்பரஞ் செய்தற்குக் கொட்டப்படும் பேரிகையொப்பர் 'என்பரே அந்த 1076 ஆவது குறள்.

சிற்றூர்களில் கிராமச் செய்திகளை ஊர் தலையாரி 'மணியக்காரன் கூறும் தகவல்களை கழுத்தில் தொங்க விட்டு கொண்டிருக்கும் பறையில் அறைந்து தெருக்கள் தோறும் சொல்லிக் கொண்டே போவான். அந்தச் செய்திகளை மக்கள் கவனிக்கிறார்களா ? கேட்கி றார்களா? என்ற அக்கரை அவனுக்குத் தேவையில்லை.

ஏனய்யா சாஸ்தரி இவ்வாறு குறட்பாக்களை இடம் மாற்றி மாற்றி பொருளைப் புரட்டிப் புரட்டி எழுதினன் என்று கேட்டால், அதற்கு அவர் கூறும் காரணம் என்ன தெரியுமா?

முன் பின் குறள்களின் இயைபு பற்றி மணக்குடவர், பரிமேலழகர் இவ்விருவரும் கொண்ட முறையினின்றும், ஈண்டு அவற்றின் முறை சிறிது வேறுபடும் என்று காரணம் கற்பிக்கின்றார். மணக்குடவர், பரிமேலழகரை சாஸ்திரி பின்பற்றட்டும், ஆனால் பிறகு ஏன் அவற்றினின்றும் தனது உரை முறை சிறிது தனது உரை முறை சிறிது வேறுபடும் என்கிறார் ? இதுதான் ஆரியத்தின் அரிச்சுவடி.

திருக்குறளில் வரும் சில சொற்களுக்கு மணக்குடவரும், பரிமேலழகரும் அவரவர் ஆய்வுரை களைத் திருவள்ளுவர் பெருமானது அடிப்படை கருத்துக்களுக்கு மாறாமல் எழுதினார்களே தவிர, பிறழ்ந்து, சிதைந்து எழுதவில்லை.

1. இந்திரன் தான் திருவள்ளுவர் கூறும் அந்தணன்
2. அதற்கு அவரே சாட்சி
3. மோட்சத்திற்கு விதை
4. அவருடைய செயலே சாட்சி
5. அவர் ரஸம், ரூபம், ஸ்பர்சம்
6. சப்தம் ; கந்தம் இவற்றின் பிரக்ருதி
7. விக்ருதிகளை அறிந்தவர்

என்ற மேற்கண்ட கருத்துக்களை மணக்குடவரோ, பரிமேலழகரோ, வேறு எந்த உரையாளர்களோ வாசகர்கள் மீது அடித்துத் திணித்து மூளைச் சலவை செய்யவில்லை என்பதே உண்மை.

ஆனால் சாஸ்திரி, திருக்குறள், அதே அதிகாரத்தில் வரும் 10ஆவது குறளான 30வது குறளில் அந்தணர் என்போர் அறவோர் என்ற குறளை, தனது பாலருரையில் 9-வது குறளாக இடம் மாற்றி வைத்து 8,10 ஆவது திருக்குறள் வரும் அதே இடத்தில், 4-ஆவது பாடலான "உர்னென்னும் நோட்டியான்" எனும் பாடலை, தனது நீத்தார் பெருமை அதிகார உரையின் இறுதியிலே வைத்து முடித்துள்ளார். என்ன காரணம் இதற்கு ?

இந்திரனே அந்தணர் ; அவரே உயர்ந்தவர் மற்றவரால் செய்ய முடியாதவற்றை எல்லாம் இந்திரனே செய்வார் ; அவர் கோபத்தின் பயனை யாராலும் தடுக்க முடியாது என்ற அரும் பண்புகளை, பெருமைகளை இந்திரன் மேலே வலிய ஏற்றித் திணித்து அவரை அந்தணர் என்பதை உலகில் நிலை நாட்டிட அரும் பாடுபட்டுள்ள உரை வித்தகராகக் காட்சி தருகிறார் சாஸ்திரி

சாஸ்திரி கூற்றுப்படி இந்திரன் அந்தணர்தானா? மற்ற எந்த உயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவரா இந்திரன்? குணநலனே சான்றோர் நலம் என்ற பண்பு நலமுடையவரா இந்திரன் ? சான்றோர்களுக்குரிய அற ஆழி ; அன்பு ஆழி ; அருள் ஆழி, அறிவு ஆழி இவற்றுள் எந்த ஆழியை வென்றவர் இந்திரன் ? என்பதை அந்த பார்ப்பன உரையாசிரியர் சாஸ்திரி விளக்கி இருக்க வேண்டாமா? இது உரையாசிரியரின் இன்றியமையா கடமை அல்லவா ?

இந்த அகல் விசும்பளார் வேந்தனான இந்திரனா மற்றவர்களால் செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்யும் தகுதியுடையவன் ? சாஸ்திரி ஏன் இப்படிப் பட்டவனுக்கு வாதாட வக்காலத்து வாங்குகிறார்? இந்திரன் கோபத்தை யாராலும் தடுக்க முடியாது என்று கூறும் பார்ப்பனப் பம்மாத்துத் தனம் யாரை ஏமாற்றிட ? கல்வியறிவற்ற மக்களை நம்ப வைக்கவா ?

அகத்திய முனிவர் பன்னிரண்டு ஆண்டுகளில் முடியக்கூடிய வேள்விகளைத் தொடங்க, அப்போது இந்திரன் மழையைப் பெய்யாதிருக்கும் படித் தடுக்க தம்முடைய தவத்தின் ஆற்றலால் தானே இந்திரன் ஆகின்றேன் என்று அவர் சொல்ல, இந்திரன் மற்ற தேவர்களோ ஓடோடி நேரில் வந்து மழையைப் பொழிய வைத்து வேள்வியை நடத்தினான்.

எனவே இதுவரை நாம் சிந்தித்தவற்றும் இந்திரன் என்ற சொல்லுக்குரிய ஆய்வுகளைக் கண்டோம் ஆனால் இந்திரன் என்பவன் அகல் விசும்புளார் கோமானா ? அல்லது.

அகத்திய முனிவரால் சாபம் பெற்றுப் பூலோக பூமியில் பாம்பாக விழுந்த நகுஷன் என்ற தற்கால இந்திரப் பதவி பெற்ற இந்திரனா ? எவன் உண்மையான இந்திரன்.

வேதங்களில் சொல்லப்பட்டு அகலிகை மீது ஆசைப்பட்டுக் கௌதம முனிவர் சாபத்தால் யோனிக் கண்களைப் பெற்ற இந்திரனா ?

திருவிளையாடல் புராணத்தில் வரும் இந்திரனா மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்படும் இந்திர விழா நாயகனா ?

நாவலர் நெடுஞ்செழியன் தனது திருக்குறள் தெளிவுரையில் விளக்கமளித்துள்ள இந்திரன் அதாவது இனிய திறமிக்க அறிவன் என்ற புலனடக்கம் பெற்ற சான்றாண்மையாளனா ?

அகலிகை, இந்திரன் பற்றிய பழங்கதைகள், திருக்கோவில் சுவர்களில் எழுதப்பட்டிருந்த செய்தி பரிபாடல் என்ற சங்க கால இலக்கியத்தில் உள்ளதே அந்த இந்திரனா ?

எனவே, ஒவ்வொரு இந்திரன் உருவமும் அவரவர் மதக் கண்ணாடியின் பார்வைக்கேற்பவே புலப்படுகின்றது கற்பனையாக எழுதப்பட்ட புராணங்களிலே பல பொய்ப் புனைவுகள் உருவாவது மிகச் சாதாரணமானது தானே!

திருவள்ளுவர் ஆரியர்களது வேத புராணங்களிலே கூறப்படுகின்ற இந்திரன் போன்ற சில சொற்களை உலகப் பொதுமறையான திருக்குறளிலே ஆட்சி செய்துள்ளார் என்றால், அந்தப் பெயருடையவன் குணக்கேடுகளை, பண்பற்றச் செயல்களை சம்பவங்களை மக்களுக்கும் சுட்டி காட்டி, அவை தமிழர் பண்பாடுகளல்ல நாகரீகமல்ல என்பதை மறந்து, தமிழ்ச் சான்றோர்களின் உண்மையான நாகரீகம் பண்பாடுகளை, நீத்தார் பெருமைகளை நிலை நாட்டிடவே இத்தகைய சில சொற்களை உலகப் பொதுமறையால் திருக்குறளிலே ஆட்சி செய்துள்ளார். என்பது என் போன்றவனின் எண்ணமாகும்?

இந்தக் கட்டுரையில் இந்திரன் என்பவன் எத்தகைய குணக்கேடன் ; விபச்சாரன் ; ஒழுங்கீனன் ; அறமறியா அற்பன் ; அயோக்கியன் ; காமக் கேடன் ; என்பனவற்றைக் கண்டோம ; இப்படிப்பட்ட ஓர் சமூக விரோதியையா அய்யன் திருவள்ளுவன் நீத்தார் பெருமைக்கு இலக்கணம் ஆக்கி இருப்பார் ? சிந்தனை செய்க !

# பாவேந்தர்க்கு நன்றியஞ்சலி

புலவர் என்.வி. கலைமணி



நிலைபெற்ற சிலையாகி, நெடும் புகழை
நிலைநிறுத்தி, அலைபோன்ற
தமிழ் மக்கள் நெஞ்சங்களிலெல்லாம்
இடம்பெற்ற பாவேந்தரே! புரட்சிக் கவியே!

நின் நாக்கு ஞானத்தகடு
நின் எழுதுகோல் – வைரக் கோல்
நின் ஏடு – தமிழ்நாடு!

சந்தனத்தில் உளிபட்டு, சந்திரனில் வதனம் தீட்டி,
கருநாவற் கனியெடுத்துக் கண்ணாக்கி,
தந்தும் கிளி நடையை – நடையாக்கி,
சங்கத்தைக் கண்டமாக்கி,
கவிதையிலே தமிழ்க் கன்னியை,
உறவாக்கிய கவிமாமன்னா!
தமிழர் தம் மொழிவிளக்கே!
காலத்தின் அணுக்களிலே – நின்
கை வண்ணம் காணுதய்யா!

ஓடிய தமிழ்க்குருதி
இடையிலே இறுதி
பனிப்பாறையாகி
சங்கை கெட்ட நிலையிலே
சங்கங்களை வளர்த்த தமிழகம்,
பொங்கும் வாரிக்கு முன்னாலே
புலம்பி நின்றது

மின்னலை இழுத்து
மலை பிளக்கும் மேகம் போல்,
கன்னல் தமிழ் இழுத்து,
தமிழை நீர் – நிமிர வைக்கப்
பாட்டெழுதிய – 'குயில்' புள்ளே!
வரலாறு மறவா வடிவமே!

நிலவைத் திறந்துவிட – வானம் வரும்!
மலரைத் திறந்து விட – தென்றல் வரும்
பகலைத் திறந்து விட – பரிதி வரும்! எமது
உணர்வைத் திறந்துவிட – நீ வருவாயே!

சாப்பாறை, இந்நிலை
சந்தனத் தமிழெடுத்து, தமிழ்த் தீயில்,
இந்தனமாக்கிய – இலக்கியக் குரவ,
உன்னோடு நாள் போயிற்றா?
இனிவரும் நாளெல்லாம்
தமிழ் இல்லா நொடிக் கிணையா?

பார்த்திருந்த ஓவியத்தை
பதம் குலையச் செய்ததெல்லாம்,
காலமெனில்,
அக்காலம் எமக்கு வேண்டா!
நடப்பதற்கே தெரியாத குழந்தைகள் – நாங்கள
நல்ல தமிழ்நடை கற்பித்த நயமான – ஆசான் நீர்!

இடையன் கோலெடுத்தால் – அது
குத்துக்கோல்!
மன்னன் கோலெடுத்தால் – செங்கோல்!
குருடன் கோலெடுத்தால் வழிக்கோல்! ஆனால்,
மக்களுக்காக நீரெடுத்தக் கோல் – 'பா'க்கோல்!

பாவேந்தே – நீர்
அடுக்கிய எழுத்துகளிலே இருந்த மிடுக்கென்ன?

கொடுத்த உவமையில் இருந்த உணர்வென்ன?
இனி, யார் எமக்கு அதுபோலத்
தரப்போகிறவர்கள் யார் இருக்கிறார்கள்?

தோகை விரித்த தொகைக் கூட்டம்,
வெட்டுக்கிளிபோல் துள்ளி வந்த
வீரச் சொற்கள்! விநோத விளக்கங்கள்
அரிமா போல் அறையும் நின் அறை கூவல்கள்
வேங்கைபோல் பாயும் முன்னேற்றப் பாய்ச்சல்
மரம் பொழியும் தமிழ்த் திமிர் –
கவிதைச் செருக்கு
இத்தனையும் உன்றன் பாடலிலே, குடிபுரியக்
கண்டோம்!

இனி அந்த ஞான மரத்தை
யாரிடம் காண்போம் ஐயா!

பொங்கும் தமிழ் உணர்வில்
பூரித்த தன்மானப் பூக்களைத்
தங்களது கவிதையெனும்
நறுமலர்த் தோட்டத்திலே கண்டோமே!

ஏறு போய நீ...” ஏடா தம்பி, எடடா பேனா,
என்று எமை எழுத நீ ஏவிய போது,
வந்து விழுந்த உமது வாத வரிகளில் எல்லாம்
வரிப் புலியின் நடையைப் பார்த்தோமே!

வெல்லத் தமிழ் மட்டும் உம்முடைய
கவிதைகளில் வீச்சாக இனிக்கவில்லை;
கொல்லும் தமிழ்வேல், வாள், ஈட்டிகளும்
ஓசை நயம் செய்தன! ஓங்காரக் கூச்சலிட்டன!

மின்னல் வரிகளாக மின்னி மின்னி – எமக்கு
இருளில் நீர் காட்டிய வழியை
எப்படி ஐயா மறப்போம்!

வேங்கையின் வாகார்ந்த உமது
வீரநடையிலே – கவிதைக் கர்ச்சனையிலே
வெண்டைக் கவிதை எழுதிடும் சில
வெள்ளாடுகள் குறை கண்டன.
மேய்ந்த நுனிப்புல் மேடபுத்தி அவற்றுக்கு!

ஆத்திகத்திற்குப் பாதம் தூக்கும்
அந்த அடிமைகள் உமை எதிர்த்து

“இல்லை என்பான் யாரடா?
தில்லையைப் போய்ப் பாரடா” என்று
ஆவர்த்தன மாடின!

“இல்லை என்பனே நானடா, அத்
தில்லை கண்ட தானடா, என – நீர்
எதிரடி முழக்க மிட்டதைக் கண்டு
‘கவி’கள் எல்லாம் கிடைத்தக் கிளைகளை
இறுகப் பற்றித் தலை கீழாய்த் தொங்கி
ஊஞ்சலாடியே காலத்தைக் கண்டு
விலாநோகச் சிரித்ததே தமிழ்நாடு!

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுதென்ற
விடுதலை முழக்கக் கவிதைகள் வீதியுலா வந்தன!

சமுதாய விரோதிகளை வீதியிலே நிறுத்த,
கொலை வாளினை எடடா, மிகு
கொடியோர் செயல் அறவே,
குகைவாழ் ஒரு புலியே உயர் –
குணமேவிய தமிழா’ – என்ற
வீர அணிவகுப்பு நடைப் பாடலைப் பாடி,
எமது நாடி நரம்புகட் கெலாம் முறுக்கேற்றிய
புரட்சிக் கவிஞரே மறப்போமா யாம் உமை!

அரசியல் விடுதலைக்குப் பாரதியார்
கவிதை எழுதினார்! சமுதாய விடுதலைக்கு
உமைப்போல் எழுதினவர் யார்? எவர்?
உதாரணத்துக்காக ஒருவிரலைமடக்கஉண்டா ஆள்?

ஆயிரக் கணக்கான கவிதைகளால்
இராமாயண இராமனைப் பாடிட
ஆயிரம் கவிஞர்கள் பிறந்தார்கள்.

இராவணன் மறத்தை, திறத்தை மாண்பைப்பாட
ஒரு கவிஞன் பிறந்தானா? உம்மைத் தவிர!
‘தென் திசையைப் பார்க்கின்றேன்,
என் சொல்வேன் – என்றன்
சிந்தையெல்லாம், தோள்களெல்லாம்
பூரிக்கு தடடா!
குன்றெடுக்கும் பெருந்தோளான்
கொடை கொடுக்கும் கையன்,
குள்ள நரிக் கூட்டத்தின் கூற்றம்

என் தமிழர் மூதாதை,
என் தமிழர் பெருமான, இராவணன் கான்ற
என்ற ஓர் இனமான; பாடலைப் பாடி
வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியைச்
செய்த முதற்பாவலர் நீரல்லவோ!

தமிழால் இரு நனைந்தவர்கள் எல்லாம்
தமிழுக்கே பகையாகி உமிழ்ந்த அவர்தம்
கவிதைகளைக் கண்டு உலகம் சிரித்த போது,
இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்?
நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே
செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும்
இந்த நேரம் இருந்தொரு லாப முண்டோ?"

என்று உலக வரலாற்றில் முதன் முறையாக
மொழிப் போருக்குப் புறப்பாட்டு

நடை பாடலை எழுதி செங்களம் காண
கட்சிபேதமின்றி தமிழுரை அழைத்த
புரட்சிக் கவிஞர் யார்? பாவேந்தரைத் தவிர!

பூ என்னும் நகத்தாலே – புலி உடம்பைக் கீறி,
சூடான ரத்தத்தில் – இந்தக் கவிதைகளை
சித்திரக் கவிதைகளை உருவாக்கக் கவிதைகளை
பனையோலைப் பள்ளத்திலே,
படிக்குங்கால், கற்கண்டாகி, முக்கனிச் சாறாகி,
கேட்குங்கால் பூச் செண்டாகி, செவிகளிலே
நின்று நிலைத்த தமிழகத்தில்,
தமிழுக்கும், பண்பாட்டுக்கும் வந்தேறிய பகை
ஆட்சித் தமிழுடன் வழக்காட நினைத்தபோது,
பாவேந்தர் எப்படி 'பா' இயற்றினார் தெரியுமா?

கிழக்கைக் கிறி எழுந்த – செங்கதிர்போல்,
எழுத்துகளை எழுச்சியாக்கி,
அசையை அரிமாவாக்கி,
ஒலிக்குடும்பம்தனை ஒழுங்காக நிரவி
பாட்டால் தன்னையே பரவ வைத்து,
பழங்காலம், நிகழ்காலம், எதிர்காலம்
என்ற காலக் கணக்கைக் கடந்து,
உடலில்லாமல் போனாலும் உலவி,
உயிர்ப்பாய் நின்ற பழம் புலவர்களைப் போல
புரட்சிப் பாடல்களை எழுதி, நமக்குப்
புத்துணர்வை ஊட்டியவர் பாவேந்தர்.

வெடிக்கும் எரிமலையை
வெங்காயத் தோல்போல் உரித்த
நெடியால் – அந்த நொடிப் பொழுதில்
ஓரின எதிர்ப்பை அடி, முடி, ஆடிட–
அதிர்ந்திட, விழிநீரை வீழ்த்தும்
ஆற்றல் படைத்தவர் கவிக்கோ!

பிளந்த பூகம்பத்தைத் தனது பின்னி வரும்
சந்தத்தால் தைத்துப் பழக்கப்பட்ட
விந்தைக் கவிஞர் பாவேந்தர்!

புயற்காற்றை எடுத்து, அதற்கு
முயற் பொறுமை தந்து,
பாட்டு வயலிலே விளையாட விட்டு
வேக வேடிக்கையைப் பார்த்து
புதுவை அரிமா புதுமை 'பா' புள் அவர்!

காலையிலே கதிர் முளைக்கத் தவறிவிட்டால்;
கனல் போர்த்திக் கிடக்கும் கவிதை ஒன்றைப்
பாவேந்தர் கட்டளையிட்டால் –
அது ககன பவனி வந்தால் - போதாதா ?
கடும் கோடையை கொட்டிட!

கோலநிலா கொஞ்சம் காலம் கடந்து வருவதாகத்
தகவல் கிடைத்தால்
சந்தன சந்தத்தால் -
சந்திரனை உருவாக்கி,

நிலா வருகின்ற வரையில்

நீ, நின்று - சந்தன ஒளி தா! என்று
அம்புலிக்கே ஆணையிட்ட
காலக் கவிஞர் பாவேந்தர் !

மேகம் முரண்பட்டு,
முத்து இறைத்தன போல்,
கொட்டிக் கிடக்கும் மீன்கள்,
குறுவிழி தன்னை மறைக்குமானால்.
பாவேந்தர் - தனது எழுத்துகளை
வாரி வாரி இறைத்து, அவற்றைவிண்
மீன்களாய் எரிய வைப்பார்!

விடியல், சற்றுக் களைப்பால் விழி மூடி,
தூக்கக் கலக்கத்தில் துவண்டுத் தூங்கி விட்டால்,

மேதினியின் மேன்மையான
காலைக் கபாடத்தைத் திறப்பது யார் ?
நித்திரை சுகத்தில்; மோன உலகம் - சற்றே
நிம்மதியாகக் கிடக்குமானால்,
சத்தான காரியங்கள்
சமயத்தில் நடக்காதே - என்றஞ்சி,

வைகறை வரத் தவறுகின்ற
நேரத்திலே எல்லாம்,
கை - கறையுடைந்த தனது கவிதையால்
பாரைத்தட்டி எழுப்பும் திறனும் - உரனுடன்,
பாவேந்தர் கவிதைக்கு இருந்ததை
பல நிகழ்வுகளிலேயே பார்த்திருக்கின்றோமே!

பாவேந்தர் கவிதையிலேயே -
இலக்கணப் பிழைகள் உள்ளன
என்று,
அழுக்காற்றுப் பிறவிகள், சில-
புறம் பேசித் திரிந்தன !

எதிரிகள் விரித்த அந்த வஞ்சக
இலக்கண வியூகச் சூதுக் களத்தை பாரதிதாசன்
கண்டார்,

இலக்கண பாசறை குவிந்த
கருவியாய் எழுச்சிப் பெற்றார்!

காய்வரும் இடத்தைக் கவிதையிலே காட்டி,
கனிவரும் அசைக் கிளைகளைச் சுட்டி,
குற்றியலுகரம் புணரும் இடங்களிலே
ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் எல்லாம்,
இசையால் ஏற்பட்ட இன்னல் அல்ல
என்று கடாவி விளக்கம் தந்தார் !

மோனை முத்திரைகள் இல்லையே
என்று மோதியவர்களின் முகத்திலறைந்தாற் போல
'காரிகை' உமிழுமாறு
பெரும்புலவன் கபிலர் காட்டிய கவரிசைகளை
வேல்களாக வீசிச் சாய்த்தார் - சழக்கத்தை

இலக்கணப் பாதையில் வழுக்கி விழாமல்
எப்போதும், எச்சரிக்கையோடும், விழிப்போடும்
எழுதும் முதிர்ந்த கவிஞரை, புரட்சி வித்தகரை,
வேண்டுமென்றே குறை கூற முற்பட்ட சிலர்
காலமது

காரணம், அவர்தந்தை பெரியார் பாதச்
சுவடுகளிலேயே நடந்து,
ஆரிய ஆதிக்கத்தை ஆணிவேரற -
சாய்க்கின்றாரே என்ற காழ்ப்பு

தமிழின் மொத்தத்தில் குத்தகை எடுத்தக்
கவிதைக் காப்பியங்கள் பலவற்றை
அறிவுச் சமுதாயத்திற்கு ;
அறிமுகப் படுத்தியவர் பாவேந்தர் !

கோடையில் கூட ஓடையில்
தண்ணீர் இருக்காது ஆனால்,
புரட்சிக் கவியின் கவிதை ஓடையிலே கோடைக்
கூட கவிதை குடித்ததாக
உண்டு வரலாறு !

பருவத்தில் பூக்கும் பூக்கள்உண்டு - ஆனால்
பாவேந்தர் காலம் கடந்து எப்போதும்
பூக்கும் உவமைக்காடு!
பொலிவற்ற கீழ்மேல் புரட்டுகளை
நலிவு செய்வதில், அவர் பாண்டியன் வாள்!
ஓய்வெடுத்த வாழ்க்கையில் ஒடுங்கும் மயிலாய்

கைம் வாழ்வு கசந்து நிற்க,
நிலா முகத்தாள் வேர் பலா என்று கூறி,
பூரிக்கும் சுவை மகிழ்ச்சியால் இளைஞர்களுக்கு
இன்பத்தை நினைவூட்டி
பூரிப்பால் கோரிக்கை எழுப்பிடத் தூண்டிய
புதிய மறுமலர்ச்சி சமுதாயச் சிற்பி அவர்,

வந்து போகும் நிலவல்ல - கவிஞர் பாம்,

வரம்போடு வீசும் தென்றல் ! வெள்ளு வா
பொழிவு!
பாரதியாரைப் பற்றி அவர் பாடியதைப்
போல
எவரும் இனிப் பாட முடியாது ! அவ்வளவு ஆசான்
தாசன்!

சுதந்தரத்திற்கு அடிமையாகும் சந்தக் கவியா?
செந்தமிழுக்கு பாரதிதாசனாரே சான்று!
உருகும் வெள்ளியை ஒழுங்காகச் சொல்லாக்கி,
பெருகும் தமிழுணர்வை - பாற்குழம்பை

வாரிப்பூசிச் சமைதக் கவிதைகள்!
தமிழர்க்கு ஊன்று கோல்கள்!
தமிழ்ப் பண்புகள் - சிந்தும் தேன் மலர்கள்
அவர் எழுதிக் குவித்த நூல்கள்!
காலமெலாம் நானும் மனோரஞ்சிதங்கள் வாழும்
வகை செய்யும் 'பா' மருந்து
இருட்டுக்கு விளக்கு பகுத்தறிவுச் சமுதாய
நெறிகள்
தமிழியக்கம் தலைதூக்கி நிற்க, நிமிர
அமுதைக் கடைந்து அள்ளித் தந்த சொற்களே!
கனல்பட்டு எரியும் கருப்பூரம் போல
அவரது தமிழின் அனல்பட்டு எதிரிகள்
தீய்ந்தனர்.

காற்றைக் கட்டளையிட்டு
கடலை வேலை வாங்கி
மலையை நெகிழச் செய்து
தென்றலைக் கவரிவீச வைத்து
அருவியை ஆராரோ படச் செய்த
அற்புதமான, இயற்கைக் கவிஞர் புரட்சிக்
கவிஞரே!

பாவேந்தர் சிலையை நாவேந்தர் ஒருவர்
சிலையாக்கி இனம் மறவா வடிவமாக்கி
அலையாடும் கடலோரம்
அழகாக வைத்தவர் அறிஞர்
அண்ணா.சிந்துக்குத் தந்தையே!

சிங்காரச் சந்தமே!
நீர் தந்த தெங்கிள
நீர்சுவை 'பா'க்கவி
எனைவிட்டுப்போனாலும்
உனைவிட்டு நீங்காத
உள்ளங்கள் கோடி உண்டு!

பாவேந்தரே!
பாரதிதாசனே!
'பா'திரத்து ஆசானே!
சீர்பூத்த செந்தமிழே!
தமிழ்க் கரும்பே!
கவிதைத் தேனே!
இலக்கியப் பாகே!
கவிஞரினத் தலைவா!

கூர் பூத்த பாடல் மொட்டே!
தமிழ் மலர்க் கையே
பேர்பூத்த புகழே;
தமிழ்ப் பேழையே!
உனது வாழ்நாள்
பரிதியில் எழுதப்பட்ட
ஒளிர்க் காற்றை

நீர் வடித்த நெருப்புக் கவிதைகளை
உலகத்தின் இருப்பாக வைத்துளீர்!
ஆண்டுகள் வரும் !
ஒவ்வொரு ஆண்டும்
உமை நினைந்து ஓடும்!

நகரும் அந்த நாள்களிலே
தமிழ் நெஞ்சங்கள்
உம் நினைவோடு நகரும், நடக்கும்!

இந்த உமது மறைந்த நாளில்
உமை நினைந்து கூவி அழ
எனது கட்டுரை ஒன்றால்தான் முடியும்!

இயற்கையின் செறிவெலாம்
இனிதாக நிறைந்தவரே
காட்டிய தமிழ்க் கோலம் போதுமெனப்
பூட்டிய சிறைக்குள் போய் ஒடுங்கி விட்டாரோ!
கெஞ்சுகின்ற எனது நெஞ்சப் புலம்பலுக்கு
ஏதோ ஒரு கவிதை கொடும் பாவேந்தரே!

## நினைவில் கொள்வீர் !

அறிவுக்கொடி இதழுக்கு அனுப்பப்பெறும் செய்திகள் - வாசகர் பக்கக் கடிதங்கள் - கவிதை - கட்டுரை - கேள்வி-பதில் பகுதிக்கான கேள்விகள் அனைத்தும் பிரதிமாதம் 25ஆம் தேதிக்குள் கிடைக்கப்பெற வேண்டும். அவற்றைச் சுருக்கியோ செப்பப்படுத்தியோ வெளியிடும் உரிமையும் - வெளியிடாமல் இருக்கும் உரிமையும் ஆசிரியருக்கு உண்டு.
அனுப்புவோர் தங்கள் முகவரியை
அஞ்சலக குறியீட்டு எண்ணுடன் எழுத வேண்டும்.
- ஆர்.

# உணவு செரிமானமாகும் வழிமுறைகள்

நா.வா.க.

நாம் ஒரு திருமண விருந்துக்குப் போகிறோம். தயாரிக்கப்பட்ட உணவு நாவுக்கு சுவையாக இருந்தால் சற்று அதிகமாக வயிறு புடைக்க உண்டு விடுகிறோம்.

உண்டவர்களுக்கு உபத்திரவங்களைக் கொடுத்து விடக் கூடாது என்று எண்ணியே விருந்து நடத்துவோர், இறுதியாக பாயசம் என்ற ஓர் இனிப்புச் சுவை நீரை வழங்கி உண்ணச் செய்கிறார்கள். ஏன் தெரியுமா? உண்ட உணவு விரைவில் ஜீரணம் ஆகிவிட வேண்டும் என்பதற்காகத்தான் பாயசம் என்ற சுவை மிகு நீரை விருந்தின்போது கொடுக்கின்றார்கள்.

முஸ்லீம் மக்கள் நடத்தும் விருந்து என்றாலும், கிறித்துவர்கள் விருந்து என்றாலும், பிரியாணியை அருமையான சுவையோடு தயாரித்து உபசரிப்பார்கள். அது ஜீரணமாவதற்காக விருந்து படைப்பதற்கு முன்னாலேயே ஒருவகை சுவை நீரைக் குடிக்கக் கொடுக்கிறார்கள்.

உணவு ஜீரணமாக இனிப்புச் சுவை நீரை வழங்குவது நமது நாட்டுக்குரிய மரபாக உள்ளது. காரணம், உணவு அஜீரணத்தை உண்டாக்கி, விருந்து படைப்போர்க்கு எந்த அவப் பெயரும் வந்துவிடக் கூடாதே என்பது தான்.

விருந்துண்போரும் 'மீதூண் விரும்பேல்' அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என்ற பழமொழியை நினைவு கூரல் நல்லதாகும்.

உணவை வேளை தவறாமல் குறிப்பிட்ட நேரத்திற்கு உண்ணப் பழகிக் கொள்வது மிகமிக முக்கியமானதாகும். வேளை தவறி உணவை உண்டால் உடல் நலக்கோளாறுகள் தோன்றுவதற்கு நாமே இடம் கொடுத்தவர்களாகி விடுவோம். எனவே தினந்தோறும் நேரத்தில் சாப்பிடுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உணவைப் பற்களால் நன்றாக அரைத்து உண்ண வேண்டும்.

நாம் உண்ட உணவுக் கவளம் உணவுக் குழாயின் வழியாக இரைப்பைக்குள்ளே போகிறது. அங்கே உணவு வகைகள் ஒன்று கலந்து சிறுகுடலில் சேர்கின்றது.

இந்த உணவுப் பாதையிலிருந்து மற்றொரு பகுதிக்கு தானாகப் போக முடியாது. அதனைத் தள்ளிவிட வேண்டும். இட்லி மாவு அரைக்கும் தாய்மார்கள், உரலுக்கு வெளியே வரும் மாவை கையால் கடைசி வரை தள்ளித் தள்ளி அரைப்பதைப்போல, உணவுப் பாதையில் தள்ளிவிட, பல தசைகள் இருக்கின்றன. அதனால் உணவு முன்னே செல்கிறது.

வாய் வழியாக, விழுங்கப்பட்ட உணவு, எப்படி உள்ளே போயிற்றோ, அதே போல வெளியே வராது. காரணம், உண்ட உணவு வயிற்றுக்குள் பல மாறுதல்களைப் பெறுவதுதான்.

உணவில் உள்ள சத்து இரத்தத்தில் கலக்கின்றது. இந்த கலந்து விடும் தன்மையை, உணவு மாறுதலைத்தான் நாம் ஜீரணம் செரிமானம் என்று சொல்கிறோம்.

உணவு வகைகள் ஜீரணமான பின்பு உடலுக்குப் பயன்படும் பகுதி இரத்தத்தால் இழுத்துக் கொள்ளப்படுகின்றது. மீதமுள்ள பகுதி வெளியேற்றப்படுகின்றது. எனவே, உணவுப் பாதையில் உணவு செரிமானம் பல பகுதிகளிலும் நடைபெறுகின்றது.

நாம் உண்ணும் உணவு ஜீரணமாவதற்கு உதவி செய்ய சில அமிலங்கள் உடலில் சுரக்கின்றன. Digestive Juices உமிழ் நீரில் அதிகம் சுரக்கின்றது. பற்கள் உணவை அரைக்கும்போது இந்த உமிழ்நீர் அமிலமும் அரைபட்டு உணவோடு கலக்கின்றது. இப்படி நன்றாக அரைக்கப்பட்ட உணவை விழுங்கியதற்குப் பிறகு உணவு மீது நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. இறுதியாக அந்த உணவு வயிற்றுப் பகுதிக்குள் சென்றடைகின்றது. இதைத்தான் இரைப்பை என்கிறார்கள் டாக்டர்கள்.

இந்த இரைப்பையில் உணவு நன்றாக செரிமானம் ஆகாவிட்டால் அதனால் பல கேடுகள் உண்டாகின்றது.

உண்ணும் உணவு அஜீரணமாகாமல் நன்றாக ஜீரணமாக வேண்டும். அப்போது தான் நம்மால் ஆரோக்கிய வாழ்வை வாழ முடியும்.